இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 11 | திகதி : 10.08.2025 | விலை : 50.00

# கத்தோலிக்க ஆலயங்களில் திருநாட்களின்போது வீதிகளில் ஒலிபெருக்கி பயன்படுத்தத் தடை

யாழ்.மறைமாவட்ட குருமுதல்வர்



கத்தோலிக்க தேவாலயங்களில் திருநாட்களின்போது வீதிகளில் ஒலிபெருக்கி பயன்படுத்துவதால், ஒலியால் சூழல் மாசடைவதோடு மாணவர்கள், நோயாளர்கள், வயோதிபர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இச்செயற்பாடு எம் சமூகத்தின் பெரும் பிரச்சினையாகக் கருதப்படுகின்றது என யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம் அடிகளார் பாதுகாவலன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: யாழ். மறைமாவட்டத்தில் புதிதாய் வாழ்வோம் என்ற தலைப்பில் 2016ம் ஆண்டு நடைபெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டில் எடுக்கப்பட்ட மிகவும் முக்கியமான தீர்மானங்களில் ஒலிபெருக்கிப் பாவனை சம்பந்தமான விடயம் முக்கியமான இடத்தைப் பெற்றது. மாநாட்டின் தீர்மான இலக்கம் 4 கூறுவதாவது: ஆலய வழிபாடுகளின் போது பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கி சாதனங்களினால் ஆலயச் சுற்றாடலில் வாழும் மாணவர்கள். பாடசாலைகள், நோயாளர்கள், வயோதிபர் ஆகியோருக்கு ஏற்படும் இடையூறுகளைத் தவிர்க்க பின்வரும் ஒழுங்குகள் கடைப்பிடிக்கப்படவேண்டும். நாட் திருப்பலிகள், ஞாயிறு திருப்பலிகளின் போது ஆலயத்திற்கு உள்ளே மட்டும் கேட்கும் படியாகவும், திருநாட் காலங்களில் ஆலய வளாகத்துக்குட்பட்டதாகவும் ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்பட வேண்டும். இம்மாநாட்டின் இத்தீர்மானத்தைத் தொடர்ந்து யாழ் மறைமாவட்டத்தில் பல ஆலயங்களில் இந் நடைமுறை மிகவும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இருப்பினும் சில ஆலயங்களில் இக்கட்டுப்பாடானது உதாசீனப்படுத்தப்பட்டமையால், இன்று இது ஓர் சமூகப் பிரச்சினையாக மாறிவிட்டது. யாழ். அரச அதிபர் கூட ஒலிபெருக்கிப் பயன்பாட்டில் கோவில்கள், ஆலயங்களில் கட்டுப்பாட்டினைப் பேணுமாறு வலியுறுத்தியுள்ளார்.



தற்போது ஒலிபெருக்கிப் பாவனை யாழ் திருஅவையினுடைய பிரச்சினையாக மட்டுமல்லாது ஒலியால் சூழல் மாசடைதல் எனும் சமூகத் தீமையாக மாறி விட்டதால், இச் சமூக சீர்திருத்தச் செயலைச் செய்வதற்கு அனைத்துக் குருக்களும், துறவிகளும், பொது நிலையினரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி, வீதிகளில் ஒலிபெருக்கி பாவிப்பதை முற்றாகத் தவிர்க்க உதவுமாறும், மேற்படி மாநாட்டுத் தீர்மானத்தை இறுக்கமாகக் கடைப்பிடிக்குமாறும் கண்டிப்பாகக் கேட்டுக்கொள்கின்றேன் என யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அவர்கள் வேண்டியுள்ளார்.

## புலோப்பளை ஆயலத் திறப்பு விழா



புலோப்பளை புனித இராயப்பர் ஆலயத் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலை யில் திறப்புவிழா கடந்த 28ஆம் திகதி நடை பெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜோர்ச் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட **ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள்** கலந்து ஆலயத்தை ஆசீர்வதித்துத் திறந்துவைத்துத் திருப்பலியைத் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் அரு ட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறை மக்களௌனப் பலரும் கலந்து கொண்டனர்.

## உப்புமாவெளியில் செபமாலை அன்னைக்குப் புதிய ஆலயம்



அளம்பில் உப்புமாவெளி, தூண்டாய் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த செபமாலை அன்னை ஆலயக் கட்டுமானப்பணிகள் நிறைவடைந்த நிலையில் அவ்வாலயத் திறப்பு விழாவும் திருவிழாத் திருப்பலியும் கடந்த் 30ஆம் திகதி நடைபெற்றன. உடுப்புக்குளம் பங்குத் தந்தை அருட்தந்தை யூட் அமலதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட **ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்கள்** கலந்து புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்துத் திருவிழாத் திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள், பிறசமயத்தினரெனப் பலரும் கலந்து செபித்தனர். 1990ஆம் ஆண்டு நிலவிய போர்ச்சூழலினால் வலிகாமம் மயிலிட்டுப் பிரதேசத்திலிருந்த ஒரு தொகுதி மக்கள் இடம்பெயர்ந்து தூண்டாயப் பிரதேசத்தில் குடியேறினர். இமமக்கள் தமது வழிபாட்டிற்கென ஒரு ஆலயத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு இவ்வாலயத்திற்கான கட்டுமானப்பணிகளை 2024ஆம் ஆண்டு பங்குத்தந்தை அருட்தந்தை யூட் அமலதாஸ் அவர்களின் வழிகாட்டலில் ஆரம்பித்தனர். இவ்வாலயக் கட்டுமானப் பணிக்கான நிதி உதவியை யாழ். மறைமாவட்ட ஆயர் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு மக்கள் வழங்கியிருந்ததுடன் பெருமளவு நிதியுதவியை பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் திரு. கிறிஸ்ரி அருள்ஞானம் மரியாம்பிள்ளை அவர்கள் வழங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## அருளாளர்கள் பிரசாத்தி, அகுதீஸ் உருவத் தபால் தலை வெளியீடு



அருளாளர்கள் பிரசாத்தி மற்றும் அகுதீஸ் ஆகிய இருவரும் தங்களது குறுகிய வாழ்க்கையினால் கிறிஸ்துவுக்கு சான்றுள்ள வாழ்க்கை வாழ்ந்ததை எடுத்துரைக்கும் வகையிலும், இரண்டு இளைஞர்களுக்கு மரியாதை செலுத்தும் நோக்கத்திலும் இத்தபால் தலையானது வெளியிடப்பட இருக்கின்றது. திரு அவையின் புதிய புனிதர்களாக அறிவிக்கப்பட இருக்கும் அருளாளர்கள், ஜார்ஜோ பிரசாத்தி மற்றும் கார்லோ அகுதீஸ் அவர்களின் உருவப்படங்களைத் தபாலத் தலைகளாக வெளியிட உள்ளது வத்திக்கான் தபால் தொடர்புத்துறை. ஆகஸ்டு 8, வெளியிடப்பட்ட தகவல்களின்படி ஓவியர் ஆல்பர்டோ பால்செட்டி (1878-1951) என்பவரால் வரையப்பட்ட அருளாளர் பியர் ஜோர்ஜோ ப்ராசாத்தியின் (1901-1925) உருவப்படம், அருளாளர் கார்லோ அகுதீஸ் (1991-2006) அவரின் புகைப்படம் தபால் தலைகளாக செப்டம்பர் 7, அன்று வெளியிடப்பட இருக்கின்றன.

அருளாளர் கார்லோ அகுதீஸ், அசிசிக்கு அருகிலுள்ள சுபாசியோ மலையில், அவரது இறப்பிற்கு முந்தைய கடைசிப் பள்ளிப் பயணங்களின் போது, எடுத்த புகைப்படமான சிவப்பு நிற அரைச் சட்டை அணிந்து தோளில் ஒரு பையை சுமந்து நிற்பது போன்ற புகைப்படமானது தபால் தலையாக வெளியிடப்பட உள்ளது.இந்த தபால் தலைகளானது, வத்திக்கானின் தபால் மற்றும் அஞ்சல் வெளியீட்டு அலுவலகம், தூய மரினோ குடியரசு, மால்டா இராணுவம் ஆகியவற்றுடன் இணைந்து வத்திக்கான் நகர மாநிலத்தின் ஆளுநரகத்தின் அஞ்சல் மற்றும் தபால்தலை சேவையால் நிர்வகிக்கப்பட்டு வெளியிடப்பட இருக்கின்றன. அருளாளர்கள் பிரசாத்தி மற்றும் அகுதீஸ் ஆகிய இருவரும் தங்களது குறுகிய வாழ்க்கையினால் கிறிஸ்துவுக்கு சான்றுள்ள வாழ்க்கை வாழ்ந்ததை எடுத்துரைக்கும் வகையிலும், இரண்டு இளைஞர்களுக்கு மரியாதை செலுத்தும் நோக்கத்திலும் இத்தபால் தலையானது வெளியிடப்பட இருக்கின்றது.

## கலையியல் செல்வன் விருதுபெறும் குருநகர் இளையோர்



குருநகர் புனித யாகப்பர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு குருநகர் இளைஞர் கலைக்கழகத்தின் வைரவிழா ஆண்டின் ஆரம்பநிகழ்வு கடந்த 27ம் திகதி கலையரங்கில் சிறப்பாக நடை பெற்றது. குருநகர் இளைஞர் கலைக்கழகத் தலைவர் செல்வன் சீசர் குகேந்திரன் அவர்களின் தலைமையில் கலைக்கழக மேனாள் செயலாளரும் இந்நாள் ஆலோசகருமான திரு. கிளமென்ட் நெல்சன் அவர்களது வழிகாட்டலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உயர்திரு. கைலாசப்பிள்ளை சிவகரன் அவர்கள் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக யாழ் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி. ம.ஜெறோம் செல்வ நாயகம் அடிகளாரும், யாழ்ப்பாண மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு. இ. கிருஷ்ணகுமார் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

கௌரவ விருந்தினராக குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி.அ. யாவிஸ் அடிகளார் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.இக்கலைவிழாவில் குருநகர் மண்ணின் மைந்தர்களாக 15 வருடத்திற்கு மேலான கலைப்பயண அனுபவமும் குருநகர் இளைஞர் கலைக்கழகத்தோடு இணைந்து நீண்டகாலம் பணியாற்றியவருகின்ற இரண்டு இளம் கலைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களது ப.2

## "செந்தூது" நாட்டுக்கூத்து ஆற்றுகை நிகழ்வு



ஊர்காவற்றுறை புனித யாகப்பர் ஆலய திருவிழாவை சிறப்பித்து ஊர்காவற்றுறை காவலூர் கலை க்கழகத்தினரால் மேடையேற்றப்பட்ட புனித யாகப்பர் சரிதையைக் கூறும் **"செந்தூது"** நாட்டுக்கூத்து ஆற்றுகை நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை சாள்ஸ் ஜஸ்ரின் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 26ஆம் திகதி ஆலய வளாகத்தில் நடைபெற்றது. காலஞ்சென்ற புலவர் பிரான்சிஸ் மிக்கேல்பிள்ளை அவர்களின் எழுத்துரு வாக்கத்தில் அன்ரனி பெர்னான்டோ ஜெனிபர் அவர்களின் நெறியாள்கையில் மேடை யேற்றப்பட்ட இக்கூத்தில் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலும் 30ற்கும் அதிகமான கலைஞர்கள் பங்குபற்றியிருந்தனர். இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் பிரதம விருந்தினராகவும் திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் திரு. யோண்சன் ராஜ்குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி தக்சாயினி செல்வகுமார் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டனர். இந்நிகழ்விற்கான நிதியனுசரணையை ஊர்காவற்துறை புனித யாகப்பர் ஆலய கனடா ஒன்றியம் வழங்கியிருந்தது.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## மரியன்னையின் விண்ணேற்பு விடுக்கும் அழைப்பு

திருஅவை ஆகஸ்டு 15-ஆம் நாளில் புனித கன்னி மரியாவின் விண்ணேற்புப் பெருவிழாவை மகிழ்ந்து கொண்டாடுகிறது. அன்னை மரியா பிறப்பு நிலை பாவத்திலிருந்து விடுதலை பெற்று, இயேசுவின் தாயாராகப் பிறந்து, பாவத்திற்கு அடிமையாகாமல் வாழ்ந்து விண்ணுலகிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாளை நாம் மகிழ்ந்து கொண்டாடுகிறோம்.

**விண்ணேற்றம், விண்ணேற்பு** (Ascension and Assumption)

ஆண்டவர் இயேசுக் கிறிஸ்து விண்ணகம் சென்றதை விளக்குவதற்கு "விண்ணேற்றம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றோம். இதற்கு ஆங்கிலத்தில், "Ascension" என்று சொல்லுகிறோம். இந்த ஆங்கிலச் சொல்லுக்கு "மேலே செல்லுதல்" என்று பொருள்படும். ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து தனது ஆற்றலினால், உயிர்த்த நாற்பது நாட் களுக்குப் பின்னர் விண்ணுலகம் சென்றார் என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது.

மரியா விண்ணுலகம் சென்றதைக் குறிப்பதற்கு நாம், "விண்ணேற்பு" என்ற வார்த்தையை உபயோகிக்கின்றோம். இதற்கு ஆங்கிலத்தில் "Assumption" என்ற வார்த்தை உள்ளது. இவ்வுலகில் மரியா நிறைவாக வாழ்ந்த பின்னர், இவர் விண்ணுலகிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்ற பொருள் நமக்குத் தரப்படுகின்றது.

திருப்பலிப் புத்தகத்தில் இந்த இரண்டு விழாக்களுக்கும் உள்ள திருக்குழும மன்றாட்டுகள் மேலே சொல்லப்பட்ட கருத்தைத் தெளிவுற விளக்குகின்றன. இயேசுவின் விண்ணேற்றத்தைக் குறிப்பிடும்போது, "எல்லா வல்ல இறைவா, இந்நாளில் உம் ஒரே திருமகனும் எம் மீட்பருமான கிறிஸ்து விண்ணகத்துக்கு ஏறிச் சென்றதை நம்புகிறோம்" என்றுள்ளது. ஆனால் அன்னை மரியாவின் விண்ணேற்பு பற்றிச் சொல்லும்போது, "எல்லாம் வல்ல இறைவா, உம் திருமகனின் அன்னையாகிய மாசற்ற கன்னி மரியாவை உடலோடும் ஆன்மாவோடும். விண்ணக மாட்சிக்கு எடுத்துக்கொண்டீர் என்றிருக்கிறது.

மரியா இறந்து விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டாரா? அல்லது - இறக்காமலே விண்ணக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாரா? என்பது பற்றி நாம் உறுதியாகச் சொல்ல இயலவில்லை. இது குறித்துப் பல கருத்துகள் உள்ளன. ஆனால் அன்னை மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணுலகில் இருக்கிறார் என்பது இறை நம்பிக்கையின் கோட்பாடாக இருக்கிறது. ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து தந்தையின் வலது பக்கத்திலும், மரியா விண்ணகத்தில் இருப்பதுபோல, நாமும் ஒருநாள் விண்ணகம் செல்வோம் என்பது நமது நிலையான நம்பிக்கையாக இருக்கிறது.

அன்னை மரியாவின் விண்ணேற்புப் பற்றி 1950-ஆம் ஆண்டு திருத்தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதர் தனது, "Munificebtissimus Deus" என்ற திருத்தூது அமைப்பு விதித் தொகுப்பின் வழி பின்வருமாறு 'இறைவனின் மாசற்ற அன்னை மரியா, எப்பொழுதும் கன்னி, தனது இவ்வுலக வாழ்வின் நிறைவை அடைந்த பிறகு முழு உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் இது இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாடாக நாங்கள் அறிவிக்கிறோம்" என வரை யறுக்கிறார்.

இந்த நம்பிக்கைக் கோட்பாட்டிற்கு அடிப்படையாக இருப்பது, 1854- ஆம் ஆண்டு திருத்தந்தை பயஸ் IX அன்னை மரியா பிறப்பு நிலை பாவமின்றி அமல உற்பவியாகப் பிறந்தார் என்ற இறை நம்பிக்கையின் கோட்பாடாகும். திருஅவையின் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடும், "மாசற்ற கன்னி ஆதிப்பாவக்கறை எதுவுமின்றிப் பாதுகாக்கப்பெற்று, தம் மண்ணுலக வாழ்வு நிறைவுற்றதும் ஆன்மாவோடும், உடலோடும் விண்ணுலக மாட்சிக்கு எடுத்துச் செல்லப் பெற்றார்" என்று குறிப்பிடுகிறது. (திருஅவை 59)

அன்னை மரியா யாருக்கும், எதற்கும் அடிமையாக இருக்கவில்லை மரியா கடவுளுக்கும் அவரது வார்த்தைக்கும் மட்டும் அடிமையாக வாழ்ந்தார். அன்னையின் விழாவைச்சிறப்பிக்கும்வேளையில்நாம்யாருக்குஎதற்குஅடிமையாகஇருக்கிறோம்என்றுசிந்தித்தால் வாழ்வு அர்த்தமுள்ளதாக இருக்கும். நம்முடைய பழக்க வழக்கம் நம்மை அடிமைப்படுத்துகிறதா? என்றுநம்மையேகேட்கவேண்டியசூழல்உள்ளது. கலாத்தியருக்குஎழுதியதிருமுகம் 5:19-21- கூறப்பட்டுள்ள எத்தகைய பாவங்கள் நம்மை அடிமைப்படுத்துறது என்பதைப் பவுல் அடிகளார் சுட்டிக்காட்டுகின்றார். திருத்தூதர் யோவானும், "பாவம் செய்யும் எவரும் பாவத்திற்கு அடிமை" (யோவா 8:34) என்கிறார். நாம் பாவத்திற்கு அடிமையாகாமல் அன்னை மரியாவைப் போன்று தூயவராக வாழ அழைக்கப்பெறுகின்றோ அன்னை மரியாவின் விண்ணேற்பு நமக்குச் நம்பிக்கையைக் கொடுக்கிறது. மரியாவின் மகிமை நமக்கு பெருமையைத் தருகிறது. அன்னை மரியாவைப் போன்று நாமும் ஒரு நாள் விண்ணகத்தில் இருப்போம் என்ற நம்பிக்கையை இயல்பாகவே பெறுகிறோம். எனவே நமது வாழ்க்கைச் சூழலில் அன்னை மரியாவைப் பின்பற்றி வாழ அழைக்கப்படுகின்றோம்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

## கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு

புதிய வடிவமைப்பில் மோட்சபாதை கத்தோலிக்க அச்சகத்தில் விற்பனைக்கு உண்டு. இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட திரு உருவப்படங்கள், திருச் சொரூபங்கள் மற்றும் திருவழிபாட்டுக்குப் பயன்படும் திருப்பண்டங்கள் மலிவு விலையில் கிடைக் கப் பெறும்

## நீங்கா நினைவில் மூன்றாம் ஆண்டு

தோற்றம் 07 . 11 . 1936



மறைவு 16 . 08 . 2022

அமரர் **பிலிப் அருளானந்தம்** [செபமாலை]

பண்போடும் பாசத்தோடும் பக்குவமாய் எம்மை வளர்த்த
பாசம்மிகுந்த எம் பப்பாவின் விண்ணக பிறப்பின் 3வது ஆண்டு
நினைவில் கனத்த இதயத்துடன் பப்பாவின் ஆன்ம
இளைப்பாற்றிக்காக இரஞ்சுகின்றோம்.
வறுமையிலும் சரி வளமான வாழ்விலும் சரி
எளிமையாக, நேர்மையாக, பொறுமையாக
யாரிடமும் மனம் நோகாமல், நல் ஆலோசகராக
வாழ்ந்த உங்கள் வாழ்வின் நினைவுகளை
நன்றியுடன் என்றும் நினைத்திருப்போம் பப்பா.
பேரிரக்கம் நிறைந்த விண்ணக தந்தையின் திருவடியில்
உங்கள் ஆன்ம நித்தியத்திற்கும் மகிழ்ந்திருக்க மன்றாடுகின்றோம்.

**பப்பாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக (16.08.2025) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு சுண்டிக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.**

இல. 36/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வில் 52வது நினைவஞ்சலி

அன்னை மடியில் 25 . 10 . 1910



இறைவன் அடியில் 22 . 08 . 1973

### அமரர் யோண் பற்றிக்

மேல் நீதி மன்ற சட்டத்தரணி - நொத்தரிசு - உள்ளுர் நீதிமன்றத் தலைவர்

உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே என்னிடம்
நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். (யோவான் 11:25)

அமரர் பியாற்றீஸ் சாந்தநாயகி (01.04.1924 - 03.10 2015)
அவர்களின் அன்புக் கணவர் அமரர் யோண் பற்றிக் அவர்களின்
52ஆவது ஆண்டு மரண நினைவஞ்சலி தினமான 22 ஓகஸ்ற் 2025
வெள்ளிக்கிழமை அன்று இவரின் ஆன்மா இறைவனின் இன்ப
சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற குருநகர்
புனித யாகப்பர் ஆலயத்தில் காலை 05.30
மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மகன்: பசில் பற்றிக் குடும்பத்தினர்
மெல்போண் - அவுஸ்திரேலியா

# அருட்சகோதரிகள் மீது மீண்டும் தாக்குதல் ஒடிசாவில் பயங்கரம்



பா.ஜ.க ஆளும் சத்தீஸ்கரைத் தொடர்ந்து பா.ஜ.க ஆளும் ஒடிசாவிலும் அருட்சகோதரிகள் மீது பஜ்ரங் தள் என்ற இந்துத்துவ அமைப்புத் தாக்குதல் நடத்தியதால் இந்தியத் திருஅவை அதிர்ச்சி அடைந்துள்ளது.

இரண்டு கத்தோலிக்க குருக்கள், இரண்டு அருட்சகோதரிகள் மற்றும் ஒரு மறையாசிரியர் ஆகியோர் தாக்கப்பட்ட நிலையில், அவர்களின் கைத்தொலைபேசிகளை இந்துத்துவ அமைப்பினர் பறித்துச் சென்றுள்ளனர்.

## விண்ணக இனிய வாழ்வின்

### 10ம் ஆண்டு நினைவு

அன்னையின் மடியில் 27 . 04 . 1933



ஆண்டவன் அடியில் 07 . 06 . 2015

**யேமிஸ் பிரான்சிஸ் சேவியர்**

### 16ம் ஆண்டு நினைவு

அன்னையின் மடியில் 27 . 03 . 1942



ஆண்டவன் அடியில் 27 . 03 . 2009

**பிரான்சிஸ் சேவியர் லூர்த்தம்மா**

நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக்
கொள்ளும் மனிதர் பேறு பெற்றோர் (தி.பா. 65:4)

**நித்திய வாழ்வில் நீங்கள் இளைப்பாற இறைஞ்சுகின்றோம்.**

AD-81

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

# அன்பின் மகிழ்வு

## யாழ் பேராலயத்தில் 83 தம்பதிகளின் திருமணத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாட்டம்

கடந்த வாரம், யாழ் மறை மாவட்டத்தில் உள்ள யாழ் பேராலயத் தில் தங்கள் திருமணத்தின் இருபத் தைந்து ஆண்டுகளை நிறைவு செய்த தம்பதிகளை யாழ்மறைமாவட்டத்தின் பொது நிலையினர் ஆணைக்குழு ஓர் நெகிழ்ச்சியான யூபிலிக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. இந்த ஆணைக் குழுவின் இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அவர்கள் இதனை மிகவும் சிறப் பாக ஒழுங்கு செய்து இந்தத் தம்பதி யினரை மகிழ்ச்சிப்படுத்தியது உண்மை யில் மிகவும் பாராட்டப்படவேண்டிய ஒன்று. இந்த கழகத்தின் அங்கத் தவர்கள் பம்பரம் போல் சுழன்று இந்த நிகழ்வுக்கு மெருகு ஊட்டியமை இது பொது நிலையினரின் பொற்காலம் என்பதனை சுட்டிக்காட்டி நின்றது. எனவே பொதுநிலையினர் ஆணையத்தின் இயக்குனர் அருட்பணி மவுலிஸ் மற்றும் பல்வேறு மறைக்கோட்டங்களைச் சேர்ந்த அவரது அர்ப்பணிப்புள்ள குழுவிற்கு சிறப்பான பாராட்டுகள், மொத்தத்தில் இவர்கள் இந்த நாளை தம்பதிகளுக்கு மறக்கமுடியாத நாளாக மாற்ற தங்கள் நேரத்தையும் வளங்களையும் தாராள மாகப் பகிர்ந்து கொண்டனர்.

**புனித வாசல் வழியாக ஒரு யாத்திரை**

ஒவ்வொரு தம்பதியினரும் யாழ் பேரா லய இரக்கத்தின் புனித வாசல் வழியாகப் பேராலயத்துக்குள் அழைத்துச்செல்லப் பட்டனர். இது நமது கத்தோலிக்க திருஅவை இந்த யூபிலி ஆண்டில் அழைப்பு விடுக்கும் திருப்பயணத்திற்கான ஓர் அழைப்பைத் தம்பதியினர் செயற்படுத்துவதாகும். இந்தப் புனிதவாசல்வழியாக அவர்கள் ஒன்றாக நடந்து சென்றபோது, திருமணத்தின் மையத்தில் உள்ள ஓர் உண்மையை மீண்டும் செயற்படுத்தினால் திருமண அன்பானது நிலை யானது மட்டும் அல்ல, மாறாக அது ஓர் உன்னத பயணம். இது திருமண வாக்குறுதிகளுடன் தொடங்கி பள்ளத்தாக்கு கள் மற்றும் மலை உச்சிகளில், புயல்கள் மற்றும் சூரிய ஒளி வழியாகத் தொடரும் ஒரு யாத்திரை.

இயேசு, "நானே வாயில். என் வழியாய் நுழைவோருக்கு ஆபத்து இல்லை" (யோவான் 10:9) என்றார். இந்த இரக்கத் தின் நுழைவாயில் ஊடாகப்பயணிப்பது என்பது வெறும் சடங்கு அல்ல மாறாக இது ஞானஸ்நான அருளைப் புதுப் பித்தலாகும், அவர்களின் அன்பு கிறிஸ்துவின் அன்பிலும் இரக்கத்திலும் வேரூன்றியுள்ளது என்பதை நினைவூட்டுகிறது.

**நன்றியுணர்வின் உணர்வு:** தம்பதிகள் இறைவனுக்கு நன்றி செலுத்த நற்கருணை ஆண்டவர் முன் மண்டியிட்டு ஒரு மணிநேரம் நற்கருணை ஆராதனையில் இணைந் தனர். இந்தப் புனித நேரத்தில், தங்கள் வாழ்வில் இறைவன் செய்த நன்மைகளுக்காகவும் தங்கள் துன்ப வேளைகளில் தங்களை தூக்கிச் சுமந்த இறைவனுக்கு தங்கள் இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்தனர். இந்த நேரமானது இவர்களின் நன்றி உணர்வுகளால் நிறைந்த ஓர் பிரார்த்தனை ஆழ்ந்த நன்றியுணர் வோடு இருந்தது: "என் உயிரே ஆண்டவரை போற்றிடு அவருடைய கனிவான செயல்கள் அனைத்தையும் மறவாதே (திருப்பாடல் 103:2).

83 தம்பதிகளின் வாழ்வில், ஒவ்வொருவருக்கும் தங்க ளின் சொந்தச் சிலுவைகளைச் சுமக்க வேண்டி இருந்தது, ஆனால் அனைவரும் ஒரு விடயத்தில் உடன்பட்டனர்: அதாவது அவர்கள் தங்கள் பயணத்தில் ஒருபோதும் தனியாக இருக்கவில்லை. ஏனென் றால் அந்தத் தருணங்களில் கடவுள் அவர்களுடன் இருந்தார். இன்னும் தம்பதிகள் ஒருவர் மற்றவருக்குத் துணையாக இருந்து இணைந்து வாழ்வில் வந்த சிலுவைகளைச் சுமந்தனர். திருத் தந்தை அன்பின் மகிழ்வு என்ற திருமடலில பிரான்சிஸ் எழுதுவது போல்

**அன்பு என்பது பெரிய கனவுகளோ அல்லது உயர்ந்த இலட்சியங்களோ அல்ல, மாறாக சிறிய செயற்பாடுகள் மூலம் அன்பைத் தக்கவைத்துக்கொள்வதற்கான தின சரி முயற்சி.**

**திருமணத்தின் இறையியல்:**

பரஸ்பர புனிதப்படுத்தலின் ஒரு புனிதம் கிறிஸ்தவ திருமணம் என்பது வெறும் மனித ஒப்பந்தம் அல்ல, மாறாக ஒரு தெய்வீக அழைப்பு என்று திருச்சபை கற்பிக்கிறது. இரண்டா வது வத்திக்கான் திருச்சங்கம் அறிவிக்கிறது, "உண்மையான திருமண அன்பு தெய்வீக அன்பில் சிக்கி கிறிஸ்துவின் மீட்பின் சக் தியால் நிர்வகிக்கப்பட்டு வளப்படுத்தப்படுகிறது" (Gaudium et Spes 48). திருமணம் என்பது ஒரு அன்பின் பள்ளி, அங்கு இரண்டு பேர் ஒருவருக்கொருவர் புனி தர்களாக மாற உதவுகி றார்கள்.




புனித இரண்டாம் ஜான் பால் /பேமிலியாரிஸ் கன்சோர்டி (Familiaris Consortio) என்ற திருமட லில் எழுதியது போல், "குடும்பம் சமூகத்தின் முதல் மற்றும் முக்கிய மையம்" மற்றும் "வாழ்க்கைத் துணைவர்கள் முழுமை யாக மனிதர்களாக, முழுமை யாகத் தாங்களாகவே மாறும் இடம்." திருமணம் பரிபூரணத்தை அடைவது பற்றியது அல்ல, ஆனால் பரிசுத்தத்தை நோக்கி ஒன்றாக நடப்பது பற்றியது.

இந்த புனித பரிமாணம் என்பது திருமணம் என்பது வெறுமனே இணக்கத்தன்மை அல்லது பரஸ்பர நன்மை பற்றி யது அல்ல. இது உடன்படிக்கை பற்றியது - கிறிஸ்துவின் திருச்சபை மீதான அன்பின் மாதிரியாகக் கொண்ட கடவுளால் உருவாக்கப் பட்ட ஒரு பிணைப்பு: உண்மையுள்ள, பலனளிக்கும், மன்னிக்கும் மற்றும் என்றென்றும் நிலைத்து இருக்கும்.

**இளம் தம்பதிகள் மற்றும் திருமணத்திற்குத் தயாராகி வருபவர்களுக்கான பாடங்கள்**

இன்றைய கலாசாரம் பெரும்பாலும் அன்பின் ஒரு பலவீனமான படத்தை வரைகிறது: விரைவானது, நிபந்தனை க்குட்பட்டது அல்லது உணர்வுகளைச் சார்ந்தது. ஆனால் இந்த 83 ஜோடிகளும் இளைய தலைமுறையினருக்கு மிகவும் தேவை யான ஒரு வித்தியாசமான பார்வையை வழங்குகிறார்கள். அவர்களின் வாழ்க்கையிலிருந்து பெறப்பட்ட சில முக்கிய பாடங்கள்

**1. அன்பு என்பது ஒரு தினசரி முடிவு, ஒரு முறை மட்டுமே உணரக்கூடியது அல்ல**

இந்தத் தம்பதிகள், "நாங்கள் ஒருவரையொருவர் விரும்பாத நாட்கள் இருந்தன ஆனால் நாங்கள் இன்னும் அன்பை என்றும் எப்பொழுதும் தேர்ந்தெடுத்தோம்" என்று அறிவிக்கிறார் கள். உணர்வுகள் வந்து போகலாம், ஆனால் கிறிஸ்தவ அன்பு ஒருவர் மற்றவரை அன்பு செய்யும் விருப்பத்தில் நங்கூரமிடப்படுகி றது. இது ஒவ்வொரு காலையிலும் புதுப்பிக்கப்படும் ஒரு முடிவு: பொறுமையாக இருத்தல், ஒருவர் மற்றவருக்கு செவிமடுத்தல், ஒருவர் மற்றவரை மன்னித்தல் என்பதில் தங்கியுள்ளது.

தம்பதிகளுக்குள் வரும் மோதல் தோல்வியின் அடையாளம் அல்ல, வளர்ச்சிக்கான ஒரு வாய்ப்பு என்பதை இளம் தம்பதிகள் கற்றுக்கொள்ள வேண்டும். "சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங் கள். பொழுது சாய்வதற்குள் உங்கள் சினம் தணியட்டும்" (எபேசியர் 4:26). தம்பதிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் தவ ிர்க்க முடியாதவை அவை புரித்துணர்வோடு அனுகப்படும் போது ஆழமான அன்புறவுக்கு இட்டுச் செல்லும்.

**2. ஜெபம் என்பது திருமணத்தின் உயிர்நாடி**

83 ஜோடிகளும் இந்தனை ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்திருக் கின்றார்கள் என்றால் அவர்கள் எப்போதும் ஒரே மாதிரியாக செபிக் காவிட்டாலும் கிட்டத்தட்ட அனைவரும் தாங்கள் ஒன்றாக ஜெபித் ததைப் பகிர்ந்து கொள்கிறாஉகள். சிலருக்கு, இது ஜெபமாலை. மற்றவர்களுக்கு, இது இரவில் ஒரு சங்கீதத்தைப் படிப்பது. ஆனால் அவர்கள் இவ்வாறான் ஒஉ எழிய செபத்துடன் தங்கள் நாளை ஆரம்பிக்கின்றார்கள். "ஆண்டவரே, இன்று ஒருவரையொருவர் நன்றாக நேசிக்க எங்களுக்கு உதவுங்கள்".

ஜெபம் தம்பதியரை ஒரு முக்கோணத்திற்குள் இழுக்கிறது: ஒவ் வொரு மனைவியும் கணவனும் கிறிஸ்துவை நோக்கி எவ்வ ளவு நெருக்கமாகச் செல்கிறார்களோ, அவ்வளவு நெருக்கமாக அவர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கி வருகிறார்கள்.

**3. உங்கள் பிள்ளைகள் உங்களைப் பார்த்து அன்பு என்றால் என்ன என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள்**

இந்த ஜோடிகளின் பிள்ளைகள் இவர்கள் வாழ்ந்த அன்பு வாழ்வையே பின்பற்றி வாழ விரும்புவதாகக் கூறுவார்கள்." தற்காலிக உறவுகள் மற்றும் உடைந்த வாக்குறுதிகள் நிறைந்த உலகில், இவர்களின் இந்த இருபத் தைந்து வருட பிரமாணிக்க வாழ்வானது பிள்ளை களுக்கு ஓர் முன்னுதாரணம். பெற்றோரின் உன்ன தமான திருமணம் என்பது குழந்தைகளுக்கான முதல் நல்லொழுக்கப் பள்ளி. ஒரு குழந்தை தனது தந்தை தனது தாயிடம் மென்மையாகப் பேசுவதையும் அல்லது தனது தாய் தனது கணவரை மன்னிப்பதையும் பார்க்கும்போது, இரக்கமுள்ளவராகவும், கனிவுள்ளவராகவும், உண்மையுள்ளவராகவும் இருப்பதன் அர்த்தம் என்ன என்பதைக் கற்றுக்கொள்கிறார்கள்.

**4. திருமணவாழ்வில் துன்பம்**

திருமணவாழ்வில் தம்பதிகளின் வாழ்வு எப்போதும் துன்பங்கள் துயரங்கள் இல்லாததாக இல்லை. தம்ப திகளில் பலர் வருமான இழப்பு, நோய் போன்ற பல சவால்களைச் சந்தித்தவர்கள் ஆனால் இவற்றை அவர்கள் ஒன்றாகவே சந்தித்தாஉக்கள். கடினமான ஆண்டுக ளில் அவர்கள் தனியாக இல்லை ஒருவர் மற்றவரோடு துணையாக இருந்து மாத்திரம் அல்ல இவர்கள் இருவா ரோடும் கடவுள் உடன் இருந்து பயணித் தார் என்பது ஓர் உன்னதமான ஓர் உன்னதமாக இவர்களின் அனுபவ மாகும்.

**திருமண பாராட்டு விழா**

திருமணத் தம்பதிகளுக்கான பாராட்டு விழா மண்ட பம் பெரும் மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. பாடல்கள், நாட்டியங்கள், பாராட்டுரைகள் எனப் பல நிகழ்வுகளால் நிறைந்து இருந்தது. ஒவ்வொரு தம்பதிகளும் இந்த அலங் காரம் மிகுந்த மண்டபத்தில் நின்று புகைப்படம் எடுத்து அதை ஓர் நினைவுப் பொக்கிசமாக வைத்திருக்க

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட் அகவொளி குடும்ப நல மையம்**

வேண்டும் என்று தன் உரையில் மறைமாவட்ட குரு முதல்வா கேட்டுக் கொண்டார்.

**எதிர்காலத்திற்கான தளத்தைத் தயாரித்தல்**

திருமணத்தைச் செய்து கொள்ளத் தங்ளை ஆயத்தம் செய்யும் அனைவருக்கும் இத்தம்பதிகள் ஓர் உயர்ந்த வாழ்க்கைத் தத்துவத்தைப் படிப்பிக்கின்றார்கள்: இளை ஞர்களே யுவதிகளே திருமண செய்து கொள்ளப் பயப்பட வேண்டாம். கிறிஸ்தவ திருமணம் வாழ்வு என்பது எளி தானது அல்ல, ஆனால் அது அழகானது.

"ஒரு குடும்பத்தை உருவாக்க விரும்புவது என்பது கடவுளின் கனவின் ஒரு பகுதியாக இருக்கவும், அவருடன் கனவு காணத் தேர்ந்தெடுக்கவும் தீர்மானிப்பதாகும்" என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார் (அன்பின் மகிழ்வு 321). இந்த விழா உங்கள் பகுத்தறிவுக்கு ஒரு அடையாளமாக இருக்கட்டும்.

**இறுதி எண்ணங்கள்: கடவுள் இணைத்தவை**

இந்த 83 தம்பதிகள், கிறிஸ்தவ திருமணம் என்பது ஒரு தனிப்பட்ட விடயம் அல்ல, மாறாக ஒரு பொது சாட்சி என்பதை நமக்கு நினைவூட்டுகிறார்கள். இது தம்பதியரை மட்டுமல்ல, உலகத்தையும் பரிசுத்தப்படுத்தும் ஒரு புனித பயணம். இந்த தம்பதிகளின் விசுவாசத்தில், கடவுளின் சொந்த அன்பின் ஒரு பகுதியை நாம் காண்கிறோம். இயேசு சொன்னது போல், "கடவுள் இணைத்ததை யாரும் பிரிக்காதிருக்கட்டும்" (மாற்கு 10:9). புனித பவுல் அறிவித்தது போல், "அன்பு ஒருபோதும் முடிவடையாது" (1 கொரிந்தியர் 13:8). இவர்களின் உதாரணம், கிறிஸ் தவ திருமணத்தின் அழகு மற்றும் அழைப்பில் மீண்டும் நம்பிக்கை கொள்ள ஆண்களும் பெண்களும் ஒரு புதிய தலைமுறையை ஊக்குவிக்கட்டும். மேலும், பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் நமது திருஅவை தம்பதிகளுடன் தொடர்ந்து செல்லட்டும்

## அன்பில் பற்றி....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

நேசிக்கும் ஒரு இருதயத்திற்கு, இது ஒரு கடமை அல்ல, ஆனால் அடக்க முடியாத தேவை: "நான் நான் நற்செய்தியை அறிவிக்கின்றேன் என்றாலும் அதில் நான் பெருமைப் பட ஒன்றுமில்லை இதைச் செய்யவேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்கு கேடு!' (1 கொரி 9:16). " உன் சொல் என் இதயத்தில் பற்றி எரியும் தீ போல இருக்கின்றது அது என் எலும்புகளுக்குள் அடைபட்டு கிடக்கின்றது அதனை அடக்கி வைத்து சோர்ந்து போனேன் இனி என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது.(எரே 20:9).

மக்கள் தங்கள் மதிப்பைப் பற்றிய உணர்வு, பணத்தின் சக்தி யால் அவர்கள் எதைச் சேகரிக்க முடியும் என்பதைப் பொறுத் தது என்பது அதிகரித்து வருகிறது. நாம் தொடர்ந்து வாங்குவ தற்கும், நம்மை நாமே நுகருவதற்கும், திசைதிருப்புவ தற்கும் தள்ளப்படுகிறோம், நமது உடனடி மற்றும் அற்பமான தேவைகளுக்கு அப்பால் பார்ப்பதைத் தடுக்கும் ஒரு இழிவான அமைப்பிற்குள் சிறைபிடிக்கப்படுகிறோம்.

இந்த விபரீதமான பொறிமுறையில் கிறிஸ்துவின் அன்புக்கு இடமில்லை, ஆனால் அந்த அன்பு மட்டுமே நம்மை ஒரு பைத் தியக்காரத்தனமான நாட்டத்திலிருந்து விடுவிக்க முடியும், அதில் இனி தேவையற்ற அன்புக்கு இடமில்லை. கிறிஸ்து வின் அன்பு நம் உலகிற்கு ஒரு இதயத்தைக் கொடுக்க முடியும், மேலும் அன்பு செலுத்தும் திறன் திட்டவட்டமாக இழந்து விட்டதாக நாம் நினைக்கும் இடங்களில் அன்பை உயிர்ப்பிக்க முடியும். நாம் ஏற்படுத்திய காயங்களைக் குணப்படுத்தக்கூடிய, மற்றவர்களை நேசிக்கவும் சேவை செய்யவும் நமது திறனை வலுப்படுத்தக்கூடிய, நீதியான, ஒற்றுமையான மற்றும் சகோ தரத்துவ உலகத்தை நோக்கி ஒன்றாகப் பயணிக்க நம்மை ஊக்குவிக்கும் ஜீவ நீரோடைகளை அவரது திரு இருதயம் தொடர்ந்து பொழியுமாறு நமது ஆண்டவர் இயேசு கிறிஸ் துவை நான் வேண்டுகிறேன். உயிர்த்தெழுந்த ஆண்ட வரின் முன்னிலையில், நமது அனைத்து வேறுபாடுகளையும் அவரது திறந்த இதயத்திலிருந்து என்றென்றும் பரவும் ஒளி யில் ஒத்திசைக்கும் பரலோக ராஜ்யத்தின் விருந்தை ஒன்றாகக் கொண்டாடுவதில் நாம் மகிழ்ச்சியடையும் அந்த நாள் வரை. அவர் என்றென்றும் ஆசீர்வதிக்கப்படுவாராக.

## மிகையான....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

1. திரு அவையில் அனைத்து நிலைகளிலும் மிகையான மையப்படுத்தலைத் தவிர்க்கும் வழி வகைகளைத் தெளிந்து தேர்வுசெய்து முக்கிய முடிவு எதுவெனினும், அதனுடன் தொடர்புடைய எல்லாரு டைய ஒத்திசைவை யும் பங்களிப்பையும் கூட்டொருங்கியக்க முறையில் பெற்று அதை நடைமுறைப்படுத்த வேண்டும்.
2. அந்தந்த மண்ணின் மக்களுக்கு எவ்வாறு அருட்பணி ஆற்றுவது என அவர்களுக்கு ஏற்ற வழிமுறைகள் கண்ட றியப்படவேண்டும். அவர்களு டன் கலந்துரையாடி அவை பற்றி முடிவெடுப்பது அருள்பணி சிறப்புற உதவும்
3. திரு அவையின் வாழ்விற்கு முக்கியமான திருவழி பாடு, அறவியல், சமூக நிலைப்பாடுகள். இறையியல் என்பனவற்றில் முரண்படும் பல புரிதல்களும் விளக்கங் களும், நற்செய்தி அறிவிப்புப் பணிமுறை. பண்பாட்டு மய மாதல் என்பவை பற்றிய கருத்து வேறுபாடுகளும் இன்று பரவலாக உள்ளன. உரையாடல் வழியாக பல்வேறு சமயங்களுடன் உரையாடி. ஒத்துழைத்து இத்துறையில் கிறித்தவர்கள் பெரும் பங்களிப்பு செய்யமுடியும்.



# யூபிலி நிறைவு என்பது மூவொரு இறைவனின் மாபெரும் கொடையும், அருட்பொழிவுமாகும்

> **ஆண்டவர் தாம் திருப்பொழிவு செய்தவருக்கு வெற்றி தருகின்றார். தமது தூய வானகத்தில் இருந்து அவருக்குப் பதில் அளிக்கின்றார். வெற்றியளிக்கும் தமது வலக்கையின் ஆற்றலைக் காட்டுகின்றார்**
> **(தி.பா. 20:06)**

### முகவுரை

மாபெரும் யூபிலி ஆண்டாகிய 2025ம் ஆண்டிலே அருட்தந்தை பயஸ் இருதயதாஸ் அடிகள் தன்னுடைய குருத்துவப் பணிவாழ்வில் 50 வருட நிறைவின் பொன்விழாவைக் கொண்டாடுகின்றார் என்று சொன்னால் அது பன்மடங்கு மகிழ்வான நிகழ்வாகும். ஒவ்வொரு மனிதனுடைய வாழ்வுக்கும் வெற்றிக்கும் பின்னால் பலருடைய ஒத்துழைப்பும் வழிகாட்டலும் இருந்தாலும், துறவற வாழ்விலும் இறையாட்சிப் பணியி லும் 50 வருட காத்திரமான காலத்தை நிறைவு செய்வது என்பது இறைவனின் உடனிருப்பும் அருட்பொழிவும் அன்றி வேறொன்றுமில்லை. 76 வது அகவையிலே தன்னுடைய இறையாட்சிப் பணியின் ஐம்பது வருடத்தை நிறைவு செய்யும் அருட்தந்தை அவர்கள் எமது யாழ். மறைமாவட்டத் திருஅவைக்கு இறைவன் தந்த மாபெரும் கொடையாகும். அருட்தந்தையின் யூபிலி மலருக்கு ஆக்கம் ஒன்றை வரைவதில் பெருமை அடைகின்ற அதே நேரம், இவரோடு பயணித்து நான் பெற்றுக்கொண்ட அனுபவங்களை இதில் பதிவிட முனைகின்றேன்.

### கிளிநொச்சிப் பங்கில்

நான் அருட்தந்தையை முதன் முதலில் சந்தித்தது கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தில், அருட்தந்தை J.B.தேவராஜா அடிகளாருடன் உதவிப் பங்குத்தந்தையாகப் பணிபுரிந்தார். அப்போது நான் அப்பங்கில் அருட்பணிச்சபை, இளையோர் அமைப்பு, மற்றும் வழிபாட்டுக் குழுவில் உறுப்பினராக இருந்தேன். இவர் இந்தியாவில் குருத்துவக் கல்வியை மேற்கொண்டதனால் இவரின் பேச்சில் இந்தியத் தமிழ் கலந்திருந்தது. ஆன்மீக வாழ்வில் அக்கறை உள்ளவராக இளையோரையும் ஏனையோரையும் சிறப்பாக வழிநடத்தினார். வழிபாட்டுக் குழுவை இறையியல் சிந்தனையோடு வழிநடத்தி, ஞாயிறு வாசகங்களுக்குத் தெளிவான விளக்கம் தந்து முன்னுரை, வாசக முன்னுரை, நம்பிக்கையாளர் மன்றாட்டு எப்படி எழுதப்பட வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தி, எம்மை உருவாக்கினார். அவரிடம் அன்று பெற்ற உருவாக்கமும், பயிற்சியும் இன்றும் எனக்குக் கை கொடுக்கின்றது என்றால் அது மிகையாகாது.

### பேராலயப் பங்கில்

1996ம் ஆண்டு பாரிய இடப்பெயர்வுக்குப் பின் மக்கள் மீளக் குடியேறிய போது ஆயர் இல்ல நிதிப் பொறுப்பாளராகக் கடமைபுரிந்துகொண்டு பேராலயப் பங்குத்தந்தையாகவும், ஏறக்குறைய இரண்டு வருடங்கள் பணிபுரிந்தார். அக்காலப்பகுதியில் பல சவால்களுக்கு முகம் கொடுத்து, உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை இரவிச்சந்திரனோடு இணைந்து அன்பியத்தை அறிமுகப்படுத்தி, தொடர் பயிற்சிகளை வழங்கி அன்பியங்களை உருவாக்கினார்.

### புனித வின்செண்டி போல் சபை

இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்து மீளக்குடியமர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் தேவைகள் அதிகமாக இருந்தது. அந்த வேளையில் பேராலயத்தில் சிறப்பாக ஆன்மீகப் பிறரன்புப் பணிகளைப் புரிந்து கொண்டிருந்த, புனித வின்செண்டி போல் சபைக்கு உயிர் கொடுத்து இயங்க வைத்தார். மீளக்குடியமர்ந்த ஒரு சில புனித வின்செண்டி போல் சபை உறுப்பினர்களோடு புதியவர்களையும் இணைத்து நிர்வாகத்தைத் தெரிவு செய்து சபையின் ஊடாக தேவையில் இருந்த மக்களுக்கு உதவிகளை வழங்கினார். தன்னுடைய பணம், ஆயரின் உதவி, கியூடெக் வழங்கிய உலர் உணவுகள், இவற்றோடு பங்கு மக்கள், நலன் விரும்பிகள் வழங்கிய பொருட்களோடு வறியவர்களின் தேவைகளை நிறைவு செய்தார்.

இந்த வேளையில் யாழ் மறைமாவட்ட மத்திய சபையும் செயல் இழந்து போயிருந்தது. மறைமாவட்டப் பங்குகளில் செயற்படும் பந்திகளை வழிநடத்தவும் ஊக்கப்படுத்தவும் அதன் தேவை உணரப்பட்டது. இதைப்பற்றி அருட்தந்தையோடு கதைத்தபோது 'வாரும் ஆயரிடம் போவோம்' என்று கூட்டிக் கொண்டு போனார். ஆயர் மகிழ்வோடு அதை ஏற்றுக்கொண்டார். அதேவேளை மத்திய சபையின் ஆன்ம ஆலோசகராக இருந்த அருட்தந்தை S.H.ஜெபநேசன் இறைபதமடைந்து விட்டார். உடனே கியூடெக் இயக்குநராக இருந்த அருட்தந்தை R.சூசைநாதனை நியமித்து மத்திய சபை மீண்டும் இயங்குவதற்கு வழி சமைத்தார். இந்தப் பெருமையும் யூபிலி நாயகனையே சாரும்.

### பக்திச் சபைகளை வலுப்படுத்தினார்

பேராலயப் பங்கில் அருட்பணிச் சபையை முறையாக நிறுவி ஏனைய பக்திச் சபைகளையும், பங்கேற்கும் அமைப்புக்களையும் வலுப்படுத்தி, பேராலயப் பங்குத் திருஅவையின் அருட்பணிகளை சிறப்பாக முன்னெடுத்தார். 1996ம் ஆண்டுப் பெருவிழா ஆவணி 15 சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. குருக்கள் பற்றாக்குறை இருந்தும் அனைவரும் பாராட்டும் விதமாகச் செய்து முடித்தார். அந்த வருடம் அன்னையின் திருச்சுரூபப் பவனி ஆலயத்துக்குள்ளேயே சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

### புதிய பக்திச் சபைகளை நிறுவினார்

பேராலயப்பங்கின் தேவைகளைக் கருதி புதிய பக்திச் சபைகளை ஏற்படுத்தினார். திருஇருதய சபை, மரியகொறற்றி சபை, புனித அன்னம்மாள் சபை போன்றவற்றை ஏற்படுத்தி பொது நிலையினரின் பணிகளை மேம்படுத்தினார். இவற்றில் அன்னம்மாள் சபை சிறப்பிடத்தைப் பெறுகிறது. பங்கில் உள்ள கைம்பெண்களை ஒன்றிணைத்து. ஒரு பக்திச் சபையாக உருவாக்கி புனித அன்னம்மாள் சபை எனப் பெயர் கொடுத்து அவர்களின் ஆன்மீக வாழ்வையும் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தினார். தானும் நிதிப் பங்களிப்பினை வழங்கி அப்போதைய ஆயர் மேதகு தோமஸ் ஆண்டகையிடமும் நிதி உதவி பெற்று பேராலய புனித வின்செண்டிபோல் சபையிடமும் உதவி பெற்று சபையை வலுப்படுத்தினார். கைம்பெண்களின் ஆன்மீக வாழ்வைக் கருத்திற் கொண்டு மாதத்தின் மூன்றாம் புதன் சிறப்புத் திருப்பலியும், ஆன்மீக மற்றும் உளவியல் உரைகளையும் வழங்கி அவர்களை வழிநடத்தினார். மாதாந்தக் கூட்டங்களை ஒழுங்காக நடத்தியதோடு சேமிப்பு மற்றும் கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி சுயமுயற்சிக்கான வழிகளைக் காட்டி, பொருளாதார நிலையை வலுப்படுத்தினார். அத்தோடு உறுப்பினர் ஒருவர் இறக்கும்போது சேமிப்போடு மேலதிக நிதியும் சேர்த்து அவர்களுக்கு வழங்க ஆவன செய்தார். இன்றும் இச்சபை சிறப்பாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

### நிறைவாக

அருட்தந்தை அவர்கள் மறைமாவட்டத்தில் குருத்துவப் பணிகளோடு குணமாக்கல் வழிபாடுகளையும் நோயாளரை ஆசீர்வதிக்கும் உயர்வான சேவையையும் தொடர்ந்து செய்து வருகிறார். இவர் யாழ் மறைமாவட்டத்தின் மூத்த குருவாகவும் இளம் குருக்களுக்கு எடுத்துக்காட்டாகவும் இருக்கின்றார். இவர் உடல் உள ஆன்மீக நலன்களைப் பெற்று இன்னும் பல்லாண்டு வாழவும் சிறப்பாகப் பணிகள் தொடரவும் இறையாசீரோடு வாழ்த்துகின்றோம்.

இ.அ.அமலரட்ணம்

# மிகையான மையப்படுத்தல் தவிர்க்கப்பட வேண்டும்!



வழிபாட்டுமுறைகள், அறம், சமூகம் மற்றும் இடையியல், நற்செய்திப் பணிமுறை என்பவை சார்ந்த கருத்து மோதல்கள் இன்று திரு அவையில் நிலவுகின்றன. அவற்றை மேற் கொண்டு அன்புறவை வளர்த்தெடுக்கத் துணிச்சலான முயற்சிகள் தேவை. "பன்மையில் ஒருமை" எனும் திரு அவையின் இயல்புப் பண்பைச் சிறப்பாக வளிப்படுத்துபவை, அதனுடன் ஒன்றிப்புறவில் உள்ள கீழைத் திரு அவைகள். அவற்றை இலத்தீன் மயமாக்கும் அணுகுமுறை கைவிடப்பட்டு, அவற் றின் தனித்தன்மையும் தன்னாட்சியும் அதிகமதிகமாக ஏற்றுக்கொள்ளப்படும் நிலை இன்று வந்துள்ளது. அவற்றின் பன்மையில் ஒருமை எனும் அனுபவம் திரு அவையின் கூட்டொருங்கியக்கத்தன்மையைப் புரிந்துகொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் உதவ முடியும்.

உண்மையான உலகளாவிய திரு அவையாகத் திகழ அதற்குப் பல்வகை வெளிப்பாடுகள் இயல்பானவையும் இன்றியமையாதவையும் ஆகும். ஏனெனில், அது வாழும் இடங்களும் பண்பாடுகளும் சூழமைவுகளும் வெவ்வேறானவை. அவற்றின் வேறுபடும் அர்த்தங்களையும் முதன்மைகளையும் பல்வகை வளங்களையும் ஏற்று மதிக்கும் உணர்வைத் திரு அவை இன்னும் அதிகம் வளர்த்துக்கொள்ளவேண்டும். ஒற்றுமையைக் காத்து வளர்க்கும் முனைப்பில் பன்மைத்தன்மையை அழிக்கும் மிகையான மையப்படுத்தலுக்கும் ஒருசீராக்குதலுக்கும் அது ஆளாகி விடக்கூடாது.

நற்கருணையிலிருந்தே நாம் பன்மையில் ஒருமை என்பதை எடுத்துரைக்கக் கற்றுக்கொள்கிறோம்: ஒரே அருளடையாள மறைபொருள். பல்வேறு வழிபாட்டு மரபுகள், கொண்டாட்டத்தில் ஒன்றிப்பு, அழைத்தல்கள், அருட்கொடைகள், பணிகள் என்பனவற்றில் பல்வகை. இதுவே பன்மையில் ஒருமை. ஆவியார் உருவாக்கி வளர்க்கும் இந்த ஒத்திசைவு அனைத்தையும் ஒரு சீராக்குதல் அல்ல. இருப்பினும், திரு அவைசார் கொடை ஒவ்வொன்றும் பொது வளர்ச்சிக்காகவே என்பதை வேறு எதையும் விட நற்கருணை அதிகமாகப் புலப்படுத்துகிறது"

கூட்டொருங்கியக்கத் திரு அவையின் இன்றியமையாத ஒரு பண்பு பல்வேறு பிரிந்த அல்லது சீர்திருத்தத் திரு அவைகளுடன் ஒன்றிப்பிற்கான முயற்சிகள். தம் சீடர்களின் ஒன்றிப்பு என்பது இயேசு விரும்பியதும், தமது இறுதி இரவு விருந்தின்போது தந்தையிடம் இறைவேண்டல் செய்ததும் ஆகும் (யோவா 17:20-26). அவர் விடுக்கும் அழைப்பு, நாம் பெற்றுள்ள பொதுவான திருமுழுக்கு என்பனவற்றின் அடிப்படையில் கிறிஸ்தவ ஒன்றிப்பிற்கான பயணத்தைத் தொடரவும் தீவிரப்படுத்தவும் கத்தோலிக்க திரு அவை உறுதிபூண்டுள்ளது.

மேலும், திரு அவை அதிகமதிகமாக இன்று பல பண்பாடு மற்றும் பல்சமயச் சூழமைவுகளில் இயங்குகிறது. இதனால் அந்தப் பல்வேறு பண்பாடுகள் மற்றும் சமயங்களுக்கு இடையே உரையாடல் அவசியமாகிறது. மக்களிடையே ஒன்றிப்பை உருவாக்க பல்சமய உரையாடலை ஊக்குவிக்கிறது. இவ்வுரையாடல் மனிதகுலத்தின் ஒன்றிப்பு, சமூக நீதி, அமைதி, ஒப்புரவு,சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பனவற்றையும் நோக்கியதாக இருத்தல் வேண்டும். மேலும், கூட்டொருங்கியக்கத் திரு அவை எங்கு இருந்தாலும் ஏனைய சமய நம்பிக்கையாளர்களுடன் இணைந்து அப்பாதையில் நடக்க உறுதிகொண்டுள்ளது. அது நற்செய்தியின் மகிழ்ச்சியை அவர்களுடன் தாராளமாகப் பகிர்ந்துகொண்டு, அவர்களது கொடைகளை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளவும் செய்கிறது. இத்தகைய ஒத்துழைப்பின் வழியாக அனைவரும் சகோதரர், சகோதரிகள் என ஒன்றிணைந்து நீதி, தோழமை, அமைதி என்பனவற்றை வளர்ப்பதே நமது நோக்கம்,இத்தகைய சூழ்நிலைகளில் அதன் நற்செய்தி அறிவிப்புப் பணியும் உடன் பயணித்து, செவி கொடுத்து, கற்றுக்கொள்வதாக அமைவது அவசியம். எந்த ஒரு சமயத்தை அல்லது பண்பாட்டைச் சந்திப்பது என்றாலும், அது தான் சார்ந்திருப்பதற்குச் சமமான புனித இடத்தில் புரிந்துணர்வுடன் செய்யப்பட வேண்டியது ஆகும். அதற்கு ஒருவர் தன்னுடைய "காலணிகளைக் கழற்றி வைத்துக் கொண்டு" தாழ்மை மற்றும் மதிப்பு உணர்வோடு செல்வது அவசியம்.


மேலும், பிற சமய மரபுகளுடன் உள்ள உறவில் நட்புறவு, நல்லிணக்கம், ஒத்திசைவு என்பன வற்றை வளர்ப்பதும், அருள்வாழ்வு மற்றும் அறம்சார் விழுமியங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதும், அவற்றைச் சந்தித்து அவற்றுடன் உரையாடி, வளங்களைப் பரிமாற்றம் செய்வதும் கூட்டொருங்கியக்கத் திரு அவைக்கு இயல்பான செயற்பாடுகள்.

நற்செய்தி அறிவிப்புப் பணி சில இடங்களில் குடியேற்ற ஆதிக்கத்தோடும் அந்தந்த மக்களின் பண்பாட்டுக் கலைப்பு, சமய அழிப்பு என்பனவற்றுடன் கைகோர்த்தே நடந்துள்ளது. "செய்துள்ள தவறுகளை ஏற்றல், அவை பற்றிய புதிய புரிதலைக் கற்றுக்கொள்ளுதல், குடியேற்ற ஆதிக்கத்தைக் கடந்த புதிய தான்மையுணர்வைப் புனைய முனையும் தலைமுறையோடு இணைந்து பயணித்தல் என்பன அத்தகைய சூழமைவுகளில் நற்செய்தி அறிவிப்புப் பணியாற்றுவதற்கு அவசியம். நாம் ஒருவரை ஒருவர் நிறைவாக்குகிறோம். வேறுபட்ட பண்பாடுகளைச் சந்திப்பது கிறித்தவக் குழுமங் களின் நம்பிக்கைசார் வாழ்வையும் புரிதலையும் செழுமைப்படுத்த முடியும் என அவற்றை மதிக்கும் மனநிலையும் தாழ்மையுணர்வும் அப்பணிக்கு அவசியமான அடிப்படைப் பண்புகள்" (முஅ 5ந). செயல்படுத்தச் சில பரிந்துரைகள்

(தொடர்ச்சி 6ம் பக்)

# அன்பில் பற்றி எரியும் இயேசுவின் இதயம்

அருட்பணி ஜே.இ.ஜெயசீலன்



இந்த சலேசியன் ஆன்மீகத்தின் நல்வாழ்வு செல் வாக்கின் கீழ், பரே-லெ-மோனியலின் நிகழ்வுகள் பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் நடந்தன. புனித மார்கரெட் மேரி ஆலா-) கோக் டிசம்பர் 1673 இறுதிக்கும் 1675 ஜூன் மாதத்திற்கும் இடையில் கிறிஸ்துவின் குறிப்பிடத்தக்க தொடர் காட்சிகளைப் பற்றி அறிவித்தார். இவற்றுக்கு அடிப்படையானது முதல் காட்சியிலேயே தனித்து நின்ற அன்பின் அறிவிப்பு. இயேசு கூறினார்: ”என் தெய்வீக இதயம் மனிதர்கள் மீது, குறிப்பாக உங்களுக்காக, அன்பினால் மிகவும் எரிந்துள்ளது, அதன் தீவிர அன்பின் சுடர்களை இனித் தன்னுள் அடக்க முடியாமல், அது உங்கள் மூலம் அவற்றை ஊற்றி அவர்களுக்கு வெளிப்படுத்த வேண்டும், நான் இப்போது உங்களுக்கு வெளிப்படுத்தும் அதன் விலை மதிப்பற்ற பொக்கிஷங்களால் அவர்களை வளப்படுத்த வேண்டும்”

புனித மார்கரெட் மேரியின் பதிவு சக்திவாய்ந்ததாகவும் ஆழமாக ஊடுருவுவதாகவும் உள்ளது: “அவர் தனது அன்பின் அதிசயங்களையும், இதுவரை என்னிடமிருந்து மறைத்து வைத்திருந்த அவரது புனித இருதயத்தின் விவரிக்க முடியாத ரகசியங்களையும் எனக்கு வெளிப்படுத்தினார், அவர் அதை முதல் முறையாக மிகவும் குறிப்பிடத்தக்க மற்றும் விவேகமான முறையில் எனக்குத் திறக்கும் வரை அவர் எனக்கு எந்த சந்தேகத்திற்கும் இடமளிக்கவில்லை”. அடுத்தடுத்த தோற்றங்களில் அந்த ஆறுதல் செய்தி மீண்டும் மீண்டும் கூறப்பட்டது: **‘அவர் தனது தூய அன்பின் விவரிக்க முடியாத அதிசயங்களையும், அது அவரை மனிதகுலத்தை நேசிக்க இட்டுச் சென்ற உச்சங்களையும் எனக்கு வெளிப்படுத்தினார்’.**

புனித மார்கரெட் மரியாள் நமக்கு வழங்கப்பட்ட இயேசுக் கிறிஸ்துவின் அன்பின் இந்த சக்திவாய்ந்த உணர்தல், அவருடன் அதிக ஐக்கியத்திற்கு நம்மைத் தூண்டும். அவருடைய ஆன்மீக அனுபவத்தின் ஒவ்வொரு விவரத்தையும் ஏற்றுக்கொள்ளவோ அல்லது பொருத்தவோ நாம் கடமைப்பட்டிருக்க வேண்டியதில்லை, இதில், பெரும்பாலும் நடப்பது போல, கடவுளின் தலையீடு தனிநபரின் சொந்த ஆசைகள், கவலைகள் மற்றும் உள் உருவங்களுடன் தொடர்புடைய மனித கூறுகளுடன் இணைகிறது. இத்தகைய அனுபவங்கள் எப்போதும் நற்செய்தி மற்றும் திருச்சபையின் வளமான ஆன்மீகப் பாரம்பரியத்தின் வெளிச்சத்தில் விளக்கப்பட வேண்டும், அவை நம் சகோதர சகோதரிகள் பலருக்குச் செய்யும் நன்மைகளை நாம் ஒப்புக் கொண்டாலும் கூட. இந்த வழியில், விசுவாசம் மற்றும் அன்பின் அனுபவங்களில் இருக்கும் பரிசுத்த ஆவிகளின் கொடைகளை நாம் அடையாளம் காண முடியும்.

எந்தவொரு தனிப்பட்ட விவரத்தையும் விட முக்கியமானது நமக்குக் கொடுக்கப்பட்ட செய்தியின் மையக்கரு, இது புனித மார்கரெட் மேரி கேட்ட வார்த்தைகளில் சுருக்கமாகக் கூறலாம்: ”இது மனிதர்களை மிகவும் நேசித்த இதயம், அது எதையும் விட்டு வைக்கவில்லை, தன்னை வெறுமையாக்கி, அவர்களுக்கு அதன் அன்பைக் காட்டுவதற்காக தன்னையே நுகரும்”. புனித கிளாட் டி லா கொலம்பியர், புனித மார்க்ரெட் மேரியின் அனுபவங்களைப் பற்றி அறிந்ததும், உடனடி யாக அவளைப் பாதுகாத்து, காட்சிகளைப் பற்றிப் பரப்பத் தொடங்கினார். புனித கிளாட், நற்செய்தியின் வெளிச்சத்தில் புனித இருதய பக்தியையும் அதன் அர்த்தத்தையும் புரிந்து கொள்வதில் சிறப்புப் பங்காற்றினார். ஜனவரி 1677 இல் ஒரு குறிப்பில், தனது பணி குறித்து அவர் உணர்ந்த உறுதிப்பாட்டைக் குறிப்பிட்ட பிறகு, கிளாட் தொடர்ந்தார்:

சோர்வாலும் வேதனையாலும் மூழ்கடிக்கப்பட்ட அவரது இதயம் ஆறுதலைக் காணக்கூடும். எனவே இப்போதும் கூட, ஒரு அற்புதமான ஆனால் உண்மையான முறையில், நன்றியற்ற மனிதர்களின் பாவங்களால் தொடர்ந்து காயமடைந்திருக்கும் அந்த மகா பரிசுத்த இருதயத்தை நாம் ஆறுதல்படுத்த முடியும், மேலும் அதைச் செய்ய வேண்டும்” (நிரூபம். லெட்டர் மிசெரென்டிசிமஸ் ரிடெம்ப்டர், மே 8, 1928).

எனவே, கிறிஸ்துவை ஆறுதல்படுத்த முற்படும் கடவுளின் பரிசுத்த விசுவாசிகளின் தீவிர பக்தியை யாரும் அலட்சியப்படுத்த வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இறைவனை ஆறுதல்படுத்த முயலும் சில அன்பின் செயல்களில், சில சமயங்களில் மிகவும் சிந்தனைமிக்க, நுட்பமான மற்றும் முதிர்ந்த நம்பிக்கையைக் கொண் டிருப்பதாகக் கூறுபவர்களால் கடைப்பிடிக்கப்படும் குளிர்ச்சியான, தொலைதூர, கணக்கிடப்பட்ட மற்றும் பெயரளவிலான அன்பின் செயல்களை விட, அதிக நியாயத்தன்மை, உண்மை மற்றும் ஞானம் இருக்க முடியுமா என்று சிந்திக்கவும் நான் அனைவரையும் ஊக்குவிக்கிறேன். மற்றவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்காக நம்மை நாமே ஆறுதல்படுத்திக் கொண் டோம்.

கிறிஸ்துவின் இருதயத்தையும், மரணம் வரை அவர் தன்னையே சரணடைவதையும் சிந்திப்பதன் மூலம், நாம் மிகுந்த ஆறுதலைக் காண்கிறோம். நமது துன்பங்கள் சிலுவையில் கிறிஸ்துவின் துன்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. கிருபை ஒவ்வொரு தூரத்தையும் இணைக்க முடியும் என்று நாம் நம் பினால், கிறிஸ்து தனது துன்பங்களால் ஒவ்வொரு காலத்திலும் இடத்திலும் தனது சீடர்களின் துன்பங்களுடன் தன்னை இணைத்துக் கொண்டார் என்று அர்த்தம். இந்த வழியில், நாம் துன்பத்தைத் தாங்கும் போதெல்லாம், கிறிஸ்து நம்முடன் துன்பப்படுகிறார் என்பதை அறிந்து கொள்வதன் உள்ளார்ந்த ஆறுதலையும் அனுபவிக்க முடியும். அவருக்கு ஆறுதல் அளிக்க முற்படுகையில், நாம் ஆறுதல் பெறுவோம்.

இருப்பினும், நம் சிந்தனையில் ஒரு கட்டத்தில், “என் மக்களை ஆறுதல்படுத்துங்கள்!” (ஏசாயா 40:1) என்ற யேசுவின் அவசர வேண்டுகோளை நாமும் கேட்க வேண்டும். புனித பவுல் நமக்குச் சொல்வது போல், ”எந்தவொரு துன்பத்திலும் இருப்பவர்களை நாம் ஆறுதல்படுத்த முடியும் என்பதற்காக, கடவுளால் நாம் ஆறுதல்படுத்தப்படும் ஆறுதலால்” (2 கொரிந்தியர் 1:4) கடவுள் நமக்கு ஆறுதல் அளிக்கிறார்.

இது கிறிஸ்துவின் இருதயத்திற்கான அனைத்து உண்மையான பக்தியின் சமூக மற்றும் மிஷன் பரிமாணத்தைப் பற்றிய ஆழமான புரிதலைத் தேட நம்மை சவால் செய்கிறது. ஏனென்றால், கிறிஸ்துவின் இருதயம் நம்மை பிதாவிடம் வழிநடத்துவது போல, அது நம்மை நம் சகோதர சகோதரிகளிடம் அனுப்புகிறது. கிறிஸ்துவின் இருதயம் நம் வாழ்வில் ஊக்குவிக்கும் சேவை, சகோதரத்துவம் மற்றும் மிஷன் ஆகியவற்றின் பலன்களில், பிதாவின் சித்தம் நிறைவேறுகிறது. இந்த வழியில், நாம் முழு வட்டத்திற்குள் வருகிறோம்: ”நீங்கள் அதிக கனிகளைக் கொடுப்பதால் என் தந்தை மகிமைப்படுகிறார்” (யோவான் 15:8).

### *அன்புக்கு அன்பு.*

புனித மார்கரெட் மேரி அலகோக்கின் ஆன்மீக அனுபவங்களில், இயேசு கிறிஸ்துவின் மீதான அன்பின் தீவிரமான பிரகடனத்துடன், நம் வாழ்க்கையை இறைவனிடம் ஒப்படைக்க ஒரு ஆழமான தனிப்பட்ட மற்றும் சவாலான அழைப்பை நாம் எதிர்கொள்கிறோம். நாம் நேசிக்கப்படுகிறோம் என்ற அறிவும், அந்த அன்பில் நமக்குள்ள முழுமையான நம்பிக்கையும், நமது பலவீனம் மற்றும் பல குறைபாடுகள் இருந்தபோதிலும், தாராளமாகப் பதிலளிக்கும் நமது விருப்பத்தை எந்த வகையிலும் குறைக்கவில்லை.

புனித மார்கரெட் மேரிக்குத் தாம் கண்ட இரண்டாவது பெரிய காட்சியில் தொடங்கி, மனிதகுலத்தின் மீதான தனது மிகுந்த அன்பு ”நன்றியின்மை மற்றும் அலட்சியம்”, ”புறக்கணிப்பு மற்றும் அவமதிப்பு” ஆகியவற்றை மட்டுமே பெறுவதால் தான் உணரும் சோகத்தைப் பற்றி இயேசு பேசினார். மேலும், இது, ”என் பேரார்வத்தில் நான் தாங்கிய அனைத்தையும் விட எனக்கு மிகவும் வேதனையாக இருக்கிறது” என்று அவர் மேலும் கூறினார்

இயேசு தம்முடைய அன்பின் தாகத்தைப் பற்றிப் பேசினார், மேலும் அந்தத் தாகத்திற்கு நாம் எவ்வாறு பதிலளிக்கிறோம் என்பதில் தம்முடைய இதயம் அலட்சியமாக இல்லை என்பதை வெளிப்படுத்தினார். அவரது வார்த்தைகளில், ”நான் தாகமாக இருக்கிறேன், ஆனால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட சடங்கில் மனி தர்களால் நேசிக்கப்பட வேண்டும் என்ற தீவிர தாகத்தால், இந்தத்தாகம் என்னை விழுங்குகிறது என் விருப்பப்படி, என் தாகத்தைத் தணிக்க முயற்சிக்கும் எவரையும் நான் சந்தித்ததில்லை, என் அன்பிற்கு ஈடாகக் கொடுக்கிறேன்”.

இயேசு அன்பைக் கேட்கிறார். உண்மையுள்ள இதயம் இதை உணர்ந்தவுடன், அதன் தன்னிச்சையான பதில் அன்பின் ஒரு வடிவமாக இருக்கும், தியாகங்களைப் பெருக்கவோ அல்லது ஒரு பாரமான கடமையை நிறைவேற்றவோ அல்ல: ”நான் என் கடவுளிடமிருந்து அவருடைய அன்பின் அதிகப்படியான கிருபைகளைப் பெற்றேன், அவற்றில் சிலவற்றிற்குப் பதிலளிக்கவும், அன்பிற்காக அன்புடன் பதிலளிக்கவும் நான் விரும்பினேன்” (புனித மார்கரெட் மேரி அலகோக், சுயசரிதை). எனது முன்னோடி திருத்தந்தை லியோ சுட்டிக் காட்டியபடி, அவரது புனித இருதயத்தின் உருவத்தின் மூலம், கிறிஸ்துவின் அன்பு ”அன்பிற்காக அன்பைத் திருப்பித் தர நம்மைத் தூண்டுகிறது”.

### நம் சகோதர சகோதரிகளிடம் கிறிஸ்துவின் அன்பை விரிவுபடுத்துதல்.

நாம் மீண்டும் ஒருமுறை கடவுளுடைய வார்த்தையை எடுத்துக்கொண்டு, அவ்வாறு செய்யும்போது, கிறிஸ்துவின் இருதயத்தின் அன்புக்கு நாம் அளிக்கும் சிறந்த பதில், நம் சகோதர சகோதரிகளை நேசிப்பதே என்பதை உணர வேண்டும். அன்பிற்கு அன்பைத் திருப்பித் தர இதைவிட சிறந்த வழி எதுவுமில்லை. திரு விவிலியம் இதை மிகத் தெளிவாகக் கூறுகிறது:

**’என் சகோதரர்களில் மிகவும் சிறியவராகிய இவர்களில் ஒருவருக்கு நீங்கள் செய்யும் போது, எனக்கே செய்தீர்கள்’ (மத் 25:40).**

“நீ உன்னைப் போலவே உன் அயலானையும் நேசிப்பாயாக” என்ற ஒரே கட்டளையில் முழு நியாயப்பிரமாணமும் சுருக்கப்பட்டுள்ளது” (கலாத்தியர் 5:14).

“கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக்கொண்டு தங்கள் சகோதர சகோதரிகளை வெறுப்போர் பொய்யர் தம் கண் முன்னே உள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. (1 யோவான் 4:20).

நம் சகோதர சகோதரிகள் மீதான அன்பு என்பது நமது சொந்த முயற்சிகளின் பலன் மட்டுமல்ல. அது நமது சுயநல இதயங்களின் மாற்றத்தைக் கோருகிறது. இந்த உணர்தல் அடிக்கடி மீண்டும் மீண்டும் ஜெபிக்க வழிவகுத்தது: “இயேசுவே, எங்கள் இருதயங்களை உமது இருதயங்களைப் போல ஆக்குவீராக”. புனித பவுல், தனது பங்கிற்கு, தனக்குச் செவிசாய்ப்பவர்களை நற்செயல்களைச் செய்வதற்கான பலத்திற்காக அல்ல, மாறாக கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும் . ஜெபிக்குமாறு வலியுறுத்தினார் (பிலி 2:5).

சமூகத்தின் மிகக் குறைந்த பதவிகளில் இருப்பவர்களுடன் (உக. மத்தேயு 25:31-46) தொடர்பு கொள்வதன் மூலம், “ஒவ்வொரு நபரின் கண்ணியத்தையும், குறிப்பாக “தகுதியற்றவர்கள்” என்று கருதப்பட்டவர்களின் கண்ணியத்தையும் மறுபரிசீலனை செய்யும் பெரும் புதுமையை இயேசு கொண்டு வந்தார். மனித வரலாற்றில் இந்தப் புதிய கொள்கை - தனிநபர்கள் பலவீனமாகவோ, அவமதிக்கப்படுபவராகவோ அல்லது துன்பப்படுபவராகவோ இருக்கும்போது, மனித “உருவத்தை” இழக்கும் அளவுக்குக் கூட, அவர்கள் நமது மரியாதை மற்றும் அன்புக்கு இன்னும் “தகுதியானவர்கள்“ என்பதை வலியுறுத்துகிறது - இது உலகின் முகத்தையே மாற்றியுள்ளது. கைவிடப்பட்ட குழந்தைகள், அனாதைகள், உதவி இல்லாமல் விடப்பட்ட முதியவர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், குணப்படுத்த முடியாத நோய்கள் அல்லது கடுமையான குறைபாடுகள் உள்ளவர்கள் மற்றும் தெருக்களில் வசிப்பவர்கள் போன்ற பின்தங்கிய நிலையில் இருப்பவர்களைப் பராமரிக்கும் நிறுவனங்களுக்கு இது உயிர் கொடுத்துள்ளது”

நாம் நேர்மையாக இருந்து கடவுளுடைய வார்த்தையை முழுமையாக ஏற்றுக்கொள்வோம். மறுபுறம், சமூகத்தின் முன்னேற்றத்திற்காக கிறிஸ்தவர்களாக நாம் செய்யும் பணி அதன் மத உத்வேகத்தை மறைக்கக்கூடாது, ஏனெனில் அது இறுதியில், நம் சகோதர சகோதரிகளுக்குக் கடவுள் அவர்களுக்குக் கொடுக்க விரும்புவதை விடக் குறைவாகவே தேடுவதாக இருக்கும். இந்தக் காரணத்திற்காக, கிறிஸ்துவின் இருதயத்தின் மீதான நமது அன்பின் பரிமாணத்தை நினைவு கூர்ந்து இந்த அத்தியாயத்தை முடிக்க வேண்டும்.

கிறிஸ்துவின் இருதய அன்பின் கதிர்வீச்சாக, அன்பில் மூழ்கியிருக்கும் மிஷனரிகள், கிறிஸ்துவால் கவரப்பட்டு, தங்கள் வாழ்க்கையை மாற்றிய இந்த அன்பைப் பகிர்ந்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளனர். மற்றவர்கள் அவரை நேசிக்க முற்படும் வகையில், சாட்சியாகவோ அல்லது வார்த்தையாகவோ கிறிஸ்துவைப் பற்றிப் பேச முடிவது, ஆன்மாக்களின் ஒவ்வொரு மிஷனரியின் மிகப்பெரிய விருப்பமாகும்.

கிறிஸ்து உங்களுடனான நட்பைப் பற்றி மற்றவர்களிடம், உரிய விவேகத்துடனும் மரியாதையுடனும் சொல்ல ஒருபோதும் வெட்கப்படவேண்டாம் என்று கேட்கிறார். நீங்கள் அவரைக் கண்டுபிடித்தது எவ்வளவு நல்லது மற்றும் அழகானது என்பதை மற்றவர்களிடம் சொல்லத் துணியுங்கள் என்று அவர் கேட்கிறார். “மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக் கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக் கொள்வேன் மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகில் இருக்கின்ற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன். ” (மத் 10:32).

*(தொடர்ச்சி 6ம் பக்)*

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பல்துறை ஆளுமைப் பணிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**ஆய்வில் மொழிப்புலமை**

ஆய்வுகளும் ஆராய்ச்சித் துறைகளுந் தோன்று முன்னர் பல பல்கலைக்கழகங்கள் செய்யவேண்டிய வேலையைத் தனியொரு மனிதனாக நின்று முன்னெடுத்துச் சாதித்துள்ளார். மானிடவியல், வரலாறு, மொழி, தர்க்கம், சமூகம், சமயம் சார்ந்த பல்வேறு துறைகளையும் சிறப்பான பாண்டித்தியத்துடனும் புலமையுடனும் கையாண்டமை தனிப்பெருஞ் சாதனையேயாகும். ஒரு குறிப்பிட்ட துறையில் விசேட பல்கலைக்கழகச் சித்தி பெற்றுங்கூட, மேற்கொண்டு அத்துறையில் ஆய்வுசெய்து சமூகப் பங்களிப்புகள் எதையும் வழங்க முடியாதவஉகளாக, ஏதோ கையில் பணம் கிடைத்தால் போதும் என்று பலர் அலையும் இக்காலத்தில் இவரது இப்பல்துறை சாதனையே இவர் உலகப் புகழ் பெறக் காரணமாகும்.

இதற்குக் கைகொடுத்தது இவரது மொழிப்புலமையாகும். இவர் 70 மொழிகளை வாசிக்கவும் 32 மொழிகளை எழுத, வாசிக்கவும் 18 மொழிகளை எழுத, வாசிக்க, பேசவும் தெரிந்து வைத்திருந்தார். இவரது மொழிகளைக் கற்கும் நுணுக்கமே தாவீதடிகளாருக்கும் உதவியதெனலாம். இவஉ போலொருவர் முன்னும் பின்னும் தோன்றவில்லை என்பதற்கிணங்க இவர் ஓர் இறைகொடையாளர் என்பதில் ஐயமெதுவுமில்லை.

மேலும் இவரது தாயாரின் மறுமணம் காரணமாக அச்சுவேலியில் இறைகொடையாகக் கிடைத்த சிறிய தந்தையார் சந்தியாப்பிள்ளை தம்பிமுத் துப்பிள்ளை நடத்திய ஞானப்பிரகாசர் என்ற தனது பெயர் கொண்ட அச்சகத்தில் பணியாற்றக் கிடைத்த சந்தர்ப்பமும் இவருக்குக் கைகொடுத்ததெனலாம். மானிப்பாயிலும் அச்சுவேலியிலும் பெற்ற சைவ சித்தாந்த அறிவு, இந்து சமயப் பாரம்பரியங்கள் பற்றிய அறிவு, தமிழ்ப் புலமை, மொழியாற்றல், சிறிய தந்தையார் போன்று செய்யுள் இயற்றும் வரகவி ஆற்றல், தழிழ்ப் பண்பாட்டறிவு, சொல்வன்மை, எழுத்தாற்றல் போன்ற திறமைகள் மூலமும் மொழிப்புலமையை இவஉ மென்மேலும் வளர்த்திருப்பார். ஒல்லாந்தர் காலத்தில் இங்கு பணியாற்றிய கோவைக்குரு சாங்கோபாங்க சுவாமிகள் என அழைக்கப்பட்ட யக்கோமே கொன்சால்வஸ் அடிகள் போன்று ஒரேநேரத்தில் 12 பேரைத் தன்னைச்சூழ வைத்திருந்து பல்வேறு தலைப்பில் விடயங்களைச் சொல்லி நூல்களாக எழுதவைக்கும் திறமையும் இவருக்கிருந்ததென்று பலரின் கூற்றில் இருந்து அறிகிறோம்.

**அட்டவதானி**

ஒரு விடயத்தை எழுதிக்கொண்டிருக்கும் போதே பல நூல்களைப் புரட்டுவார். வெளியே சென்று வந்திருப்போருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போதே ஒருவன் ஓடுபோட்ட காசு என்பான். எங்கட தோட்டத்து வாழைகளை வெட்டிப்போட்டு வேலை செய்த நாலு பேரையும் வெட்டிப் போட்டாங்கள் சுவாமி என்பான் இன்னொருவன். காவல்துறைக்குச் சொல்லியனுப்பி விட்டு இருக்க, சுவாமி வீட்டில மனுசியும் என்ரை குஞ்சுகளும் பட்டினி, அடுப்படியில் பூனை படுத்துக் கிடக்குது, பசி சுவாமி பசி என்பான் வேறொருவன். ஓடு போட்டவனை அனுப்பிவிடும் போது, சமையல்கார யுவானி, மதியச் சமையல் முடிந்ததென்பார்.

அதை அப்படியே பசிக்குதென்று வந்தவனின் வீட்டுக்கு அவனிடமே அனுப்பிவிடச் சொல்லிவிட்டு வந்தவனின் கையில் காசும் கொடுத்துவிட்டுப் பசியடங்கத் தண்ணீரைக் குடிக்கும் பரிதாபத்தைப் பார்க்கும் யுவானி, இனிப் பசியென்று யாரும் வரக்கூடாதென்னும் ஆதங்கததில் மீண்டும் சமையலுக்கு ஆயத்தம் செய்வார்.

திருவிழா முடிந்த கையோடு மறுநாள் தனக்குக் கிடைத்த உபசாரங்களை, வெங்காயம் சப்பி மறைத்துக் கொண்டு, “போற வழியில சுவாமியைக் கண்டிட்டுப் போகலாம் அவரொண்டும் நினைக்கமாட்டாரெண்டு,” சூட்டோடு சூடாக உபதேசியார் ஒருவார நிகழ்ச்சிகளுடன் வந்து நிற்பார், செலவழித்த காசு போகச் சந்தோசமும் கிடைக்கு மென்று. வெங்காய மணத்தில் நடந்ததை ஊகிப்பார். அவருக்கு அடுத்த வேலை சொல்லி அனுப்பும்போது, உதவிக் குருக்கள் பங்குச் சிக்கல்களுடன் வந்திருப்பர். அவர்களுடன் உரையாடலை முடிக்க முன்பு, யாராவது அறிஞர்கள் சந்தேகங் கேட்கவோ அல்லது ஏதாவதொரு கூட்டத்திற்குத் தலைமை தாங்கவோ, உரையாற்றவோ, கேட்கக் காத்திருப்பர். உயர் சாதியினரின் எதிர்ப்புகள் ஒருபுறம், ஆலயத் திருநாட்களில் மோதல்கள் மறுபுறம், மறையறிவு புகட்டுவது வேறொரு புறம், ஆசிரியர்களுக்கான விரிவுரை ஆற்றுவது, மடுவிலும் வேறு திருவிழாக்களிலும் மறையுரை ஆற்றுவது, துறவிகளுக்கு தியானங் களை நடாத்துவது, தனது மறைப் பணிக்கு அன்பளிப்புச் சேகரிப்பது போன்றவை இன்னொரு புறம். இவ்விதம் ஓய் வின்றிச் சுழன்று கொண்டேயிருப்பார்.



**இறுதிச் சாதனை**

20 . 01 - 1936 இல் கடும் நோய் கண்டு 50 நாட்கள் மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை யில் இருந்த போது 17 . 03 .1936இல் வைத்தியசாலை அதிபர் டாக்டர் ஜேம்சன், “நாளாந்தம் உம்மைப் பார்க்கக் கூட்டங்கூட்டமாய் வந்து கண்ணீர்த் துளிகளோடு செபம் பண்ணுகின்ற உமது சனங்களைக் கண்டேன். அவஉகளுடைய மன்றாட்டத்தால்தான் நீர் அற்புதமாகச் சுகமடைந்தீர்.” ஏன்று கூறிய போது “ஐம்பது நாட்கள் என் வாழ்க்கையில் வெறுமையாயிருப்பதை நினைத்தால் பெரும் ஆச்சரியமாயிருக்கிறது. எனது ஞானத் தலைவர்கள் எழுதுவதையும் முற்றாகத் தடை செய்துவிட்டார்கள்” என்று இவர் துயரப்பட்டதோடு “இறைவன் எனது நாட்களை மேலும் அதிகரித்திருக்கிறாஉ. மானிப்பாயில் ஒரு கோயில் அடியிட்ட பின்புதான் எனக்கு அழைப்பு வரும்” என்று சொல்லிச் சிரித்தார். இவ்வாறு 22 - 01 - 1947இல் தான் இறப்பதற்கு முன்பு, இவஉ செய்த இறுதிச் சாதனை தனது பிறந்த இடத்தில் புனித அந்தோனியாருக்கு ஆலயம் எழுப்பிய தாகும்.

**முடிவுரை**

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரது வரலாற்றை அணுகும் யாவரும் இவஉ இவ்வளவு தூரம் இமாலய சாதனைகளைச் சாதித்திருப்பது பற்றி மிகவும் வியப்புறுவர். என்னைப் பொறுத்தவரை இவர் ஓர் அட்டவதானி, அல்லது தசவதானி மட்டுமல்ல, சதாவதானியாகவே செயற்பட்டுள்ளார். இந்த அபாரத் திறமை இறை பராமரிப்பினாலன்றி வேறெதனாலும் சாத்தியமற்றதாகும். இந்த மாமனிதனுக்குப் பாதுகாவலனில் தொடர் கட்டுரைகளும் சிறப்பு மலரும் வெளியிடுவதோடு மட்டும் நாம் நின்றுவிடாமல், தொடர்ந்து நாம் செய்யவேண்டியவை பல உண்டு. இந்த ஆண்டில் பல்வேறு நிகழ்வுகளூடாக இளையோருக்கு அவரை அறிமுகப்புடுத்தவதோடு, தமிழ்ப் பாடப் பத்தகத்தில் இருந்து நீக்கப்பட்ட அவரது வரலாற்றுச் சாதனைகளை மீளவும் அதில் இணைத்தக் கொள்ள அதனுடன் தொடர்புடையோர் முன்வரவேண்டும்.

இவ்வாறாக 37இற்கு மேற்பட்ட ஆலயங்களுக்கான காணிகளை வாங்கி 27 ஆலயங்களைக் கட்டியெழுப்பி, 3000பேரை சமயமாற்றம் செய்து தவறியோரை மீண்டும் கொணஉந்து செய்த மறைப்பணியும் கடல் கடந்தோர் முத்திரை வெளியிட்டுப் போற்றும் வகையில் செய்த ஆய்வுப் பணியும் எழுத்துப் பணியும் சொல்லில டங்கா. இவ்வாறான, மேலதிகக் கல்வி எதுவும் மேற்கொள்ளாமல் இறைவனால் மட்டும் தனக்கு வழங்கப்பட்ட அபாரத் திறமைகள், புலமைகளை உள்வாங்கி, இன்றுவரை எவராலும் தொடரப்படாத அவரது பணிக்கும், கத்தோலிக்கத்திற்குள்ளும், துறவற நிலைக்குள்ளும் புகுந்த அவரது வாழ்வுக்கும், பின்னணியில் இருந்தது, இறைபராமரிப்பேயன்றி வேறல்ல.

**அருட்பணி. கு. யே. அன்ரனிபாலா**

---

## மறைப்பணி புரிந்த மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

**9. ஏழையின் நண்பன்**

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் சிறு வயதில் இருந்தே ஏழைகளோடும், இல்லாதவர்களோடும், ‘தாழ்த்தப்பட்டவர்களோடும்’ மரியாதையுடனும், மதிப்புடனும் பேசவும், பழகவும், நேசிக்கவும் கற்றுக்கொண்டார்.

சிறுவயதில் நடந்த ஒரு சம்பவத்தினை அச்சுவேலியைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை அவர்கள் பின் வருமாறு கூறுயிருக்கிறார்: “நீர் தாழ்த்தப்பட்டவர்களை எடே, எடி, வா, போ என்று கூப்பிடாமல் சகோதர நேசத்துடன் தம்பி, தங்கைச்சி இங்கே வாரும் என்று அழைத்தால் ஆண்டவருக்கு அதிக பிரியமாயிருக்கும் என்று போதனை புகட்டி விட்டார். அந்த நாள் தொடக்கம் இற்றைக்கும் அப்படியே பேச்சிலும், கிரியைகளிலும் நடத்து வருகிறேன்.”

ஏழைகளுக்கு எதையாவது கொடுத்துத் திருப்தியடைகின்ற உலகிலே ஏழைகளுக்காக, எளியோருக்காக வாழப் பிறந்தவர் ஒரு சிலரே. அதிலும் ஏழைகளுக்காக ஏழையாக வாழ்பவர் இன்னும் மிகச் சிலரே. அதில் சுவாமி ஞானப்பிரகாசர் தனித்துவமானவர். ஏழைகள், எளியவர்கள், சமுதாயத்தினால் தாழ்த்தப்பட்டவர்கள் குரலாக நின்று வாழ்நாள் முழுவதும் உழைத்த ஈழநாட்டின் பெரும் மனிதன்தான் நமது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.

உயர் சாதியினர், கீழ் சாதியினர் என்ற சமூகப் பாகுபாடு தலைதூக்கி இருந்த நேரம். இத்தீராத பரம்பரை நோய் தாம் வாழும் பரந்து விரிந்த தமிழ்ச் சமூகத்தில் மட்டுமல்லாது, தான் நேசித்து அன்பு செய்த திருச்சபையாகிய இறை குழுமத்தையும் பற்றிப் பிடித்ததை எண்ணி வருந்தினார். மனம் வெதும்பினார்.

இச்சவாலைத் துணிவுடன் எதிர் கொண்டார். வெறுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட மக்கள் வரிசையில் நின்று தமது வாழ்வை அர்ப்பணித்தார். நோயாளிக்கு வைத்தியமும், நோய்க்கு மருத்துவமும் செய்தார். அவருடைய 25 வருட கத்தோலிக்க வளர்ச்சி [XXV Years of Catholic Progress] என்ற நூலில் தமிழரின் மாறாத இச்சமூக நோயினை வேதனையுடன் குறிப்பிடுகிறார். “In Jaffna you may work other miracles but not the one of dissipating the unchristian atmosphere of 'caste' which may be said to permeate the very being of the Tamil man - such is the tyranny of prejudice nurtured through centuries and millenniums!" (“கிறிஸ்தவமல்லாத, மறைக்க முடியாத சாதி என்ற சூழமைவைத் தவிர, யாழ்ப்பாணத்தில் வேறு ஏதாவது புதுமைகள் செய்யலாம். இது, பல நூற்றாண்டு, ஆயிரமாண்டு காலமாகத் தமிழனின் சுயத்தில் வளர்க்கப்பட்ட கொடூரமான முற்சார்பு எண்ணமாகும்”)

தமது ஐம்பது வருட அனுபவத்தைக் கூறும் சுவாமிகளின் வார்த்தைகள் பல வருடங்கள் கழிந்தும் இன்றும் அவை எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. எம் உள்ளங்களை ஊடுருவுகின்றன. “சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி. உயர்ச்சி சொல்லல் பாவம்” என்று பாடும் மகாகவி பாரதியாரின் வரிகளும், “ஓடும் குருதியிலும் வழிந்தோடும் கண்ணீரிலும் தேடிப் பார்த்தாலும் சாதி தெரிவதுண்டோ?” என்று பாடும் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளையின் வார்த்தைகளும், “தாழ்த்தப்பட்டவர்களின் அப்போஸ்தலரின்’ சாதிக் கலப்பற்ற, சமத்துவ, சகோதரத்துவ சமூகத்தை உருவாக்க வலுச் சேர்க்கட்டும். “வலியோரை வாழ்த்தி, எளியோரைத் தாழ்த்தும் உலகே உன் செயல்தான் மாறாதா?” என்று பாடும் கவிஞனின் ஏக்கம் தீருமா?

“இனி உங்களிடையே யூதன் என்றும், கிரேக்கன் என்றும். அடிமை என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும், ஆண் என்றும், பெண் என்றும் வேறுபாடு இல்லை. இயேசுக் கிறிஸ்துவுக்குள் இணைந்துள்ள யாவரும் ஒன்றாய் இருக்கின்றீர்கள்” என்ற அருள்வாக்கு எம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்குமா? நற்செய்திப் பணி ஒரு புன்முறுவலிலேயே ஆரம்பிக்கிறது. இது அன்னை திரேசாவின் அன்பு சொரியும் வார்த்தைகள்.

சுவாமி ஞானப்பிரகாசர், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர். கல்வி கற்க அடிப்படை வசதி வாய்ப்புக்கள் இல்லாத பிள்ளைகளுக்கு கல்விக் கூடங்களை அமைத்துக் கொடுத்தார். தானே ஆசிரியராக இருந்து பல இடங்களில் ஆசிரியர் பற்றாக்குறையை மட்டுமல்ல, ஆசிரியர் இல்லாக் குறையையும் நிவர்த்தி செய்தார். மர நிழல்களும், ஓலைக் குடிசைகளும், கொட்டில்களும் ஏழைப்பிள்ளைகளின் கல்விச் சாலைகளாக அன்று அமைந்தன. இவ்வாறு பன்னிரண்டு பாடசாலைகள் அவருடைய கவனிப்பில் ஆறுதலடைந்தன.

*(தொடரும்...)*

**அருட்பணி. செ.அன்புராசா அ.ம.தி**




# ஏன் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

(சுஜி, யாழ்ப்பாணம்)
**கேள்வி: வாழ்க்கையில் சில கட்டடங்களைக் கடந்த பிறகுதான் 'இப்படிநடந்திருக்கக்கூடாது!', 'இப்படிச் செய்திருக்கக் கூடாது! என்ற எண்ணம் வருகிறது! ஏன் இவ்வெண்ணம் காலந்தாழ்த்தி ஏற்படுகிறது?**

**பதில்:** என்செய்வது? 'அளவோடு இருந்திருக்கலாம் என்ற அறிவு அத்தனையும் அனுபவித்த பிறகுதான் வருகிறது!'

*(ஜெகன், கொழும்பு)*
**கேள்வி: மக்களுக்காகத்தான் நாங்கள், மக்களுக் காக எதனையும் செய்வோம் என்பவர்கள் பலர். ஆனால் மக்களின் நலனைக் கவனிக்க யாரும் இல்லாத நிலையைப் பார்க்கிறோம்! மக்கள் பாவம் அல்லவா!?**

**பதில்:** ஜெகன், உங்கள் கேள்வியைப் படித்தபோது, 'சட்டம் ஒழுங்கைக் காப்பாற்ற காவல்துறை இருக்கிறது. நீதியைக் காப்பாற்ற நீதிமன்றங்கள் இருக்கின்றன. மிருகங்களைக் காப்பாற்ற அமைப்புக்கள் இருக்கின்றன. பாவம், மக்களைக் காப்பாற்றத்தான் யாருமே இல்லை!' என்ற கவிக்கோ அப்துல் ரகுமானின் வரிகள்தான் என் நினைவுக்கு வருகின்றன.

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*
**கேள்வி: செம்மணி சிந்துப்பாத்தி மயானத்தின் மனி தப் புதைகுழி அகழ்வு மானிடத்திற்கு எதிராகச் செய்த பெரும் குற்றமாக, இனப்படுகொலையாகக் கருதப்பட வேண்டும்! இங்கு உண்மையில் என்னதான் நடந்திருக் கிறது? இதற்கு நீதி கிடைக்குமா?**

**பதில்:** சிங்கங்கள் சேர்ந்து மனிதத்தைச் சின்னாபின்னமாக் கிச் சிதைத்திருக்கிறது!. நீதியை இனி அவன்தான் அருள-வேண்டும்.

*(மலர், யாழ்ப்பாணம்)*
**கேள்வி: பொய் சொல்வதற்கும் ஓர் அளவு இருக்கின் றதுதானே! சிலர் ஏன் முழுப்பூசணிக்காயைச் சோற்றில் மறைத்துவைப்பது போலப் பொய்யெனத் தெரிந்தும் பொய்பொய்யாய்ச் சொல்லுகிறார்கள்?**

**பதில்:** மலர், சிலர் இருக்கிறார்கள்! அவர்களை நரகத்தில் கண்டு கேட்டால்கூட அங்கு ஒருவரைப் பார்க்க வந்ததாகக் கூறுவார்கள்!

(ஊர்க்குருவி, யாழ்ப்பாணம்)
**கேள்வி: மன்னார்க் காற்றாலை விடயம், கனிய வள அகழ்வு போன்றவை எதனைக் கோ-டிட்டுக் காட்டுகிறது? இக்கட்டத்தில் மக்கள் என்ன செய்யவேண்டும்?**

**பதில்:** அபிவிருத்தி என்ற போர்வையில் நடக்கப்போ கும் பெரும் அழிவைத்தரும் தீமைகள்! இவ் அரக்-கச் செயற்பாடுகளை அனுமதிக்க எவ்வகையிலும் வழிவிடக்கூடாது!

## கலையியல் செல்வன்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கலைப்பயணங்களையும் சமூக சேவைகளையும் பாராட்டி "கலையியல் செல்வன்" விருது வழங்கிக் கௌர விக்கப்பட்டது. அந்தவகையில் செல்வன்.கட்சன் பிறாங் விதுசன் செல்வன். சீசர் குகேந்திரன் ஆகியோர் கௌர விக்கப்பட்டனர். அத்தோடு குருநகர் மண்ணின் மைந்தனாக இலங்கையின் பல பாகங்களில் பல்வேறு வகையான கூத்துமோடிகளின் தனித்துவங்களைமத் கற்றுத்தேர்ந்து தொடர்ச்சியாக குருநகரிலும் ஏனைய பிரதேசங்களிலும் கூத்துக்களை நெறியாள்கைசெய்து-வருவதோடு பாடசாலை மாணவர்களிடமும் இளை ஞர்களிடமும் அரங்குசார் புதுமைகளையும் பாரம்பரியக் கூத்துக்கலையை வளர்ப்பதிலும் அரும்பணியாற்றிக் கொண்டிருக்கும் யாழ் பல்கலைக்கழக நடனத்துறையின் வருகைதரு விரிவுரையாளர் திரு. அரியநாயகம் அன்று யூலியஸ் அவர்கள் "அண்ணாவியார்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், குருமட மாண வர்கள்,அரசசேவை அதிகாரிகள், பல்கலைக்கழக விரி-வுரையாளர்கள், மாணவர்கள், புலம்பெயர் உறவுகள், விருந்தினர்கள், பார்வையாளர்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கு பற்றினர்.


## விண்ணக வாழ்வில்

10ம் ஆண்டு நினைவு

அன்னை மடியில் 10. 07. 1922



ஆண்டவன் அடியில் 07 . 07 . 2015

அமரர்
பேதுறுப்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை

பிறந்ததின ஞாபகம்

அன்னை மடியில் 10 . 08 . 1955



ஆண்டவன் அடியில் 28 . 05 . 2025

அமரர்
மரியதாசன் றெஜினா (யோகம்)

நான் இருக்கும் இடத்திலே அவர்களும் என்னோடு இருக்க விரும்புகிறேன். (அரு 17:24)

என்றும் அன்புடன்
குடும்பத்தினர்

AD- 88

## விண்ணக வாழ்வில் 5ம் ஆண்டு நினைவு

அன்னை மடியில் 04 . 07 . 1972



இறைவன் அடியில் 20 . 07 . 2020

அமரர்
சவரிமுத்து கிறிஸ்ரியன் அலெக்சியூஸ்

அன்பின் சிகரம் அணைந்து- ஆண்டுகள் ஐந்து ஆனதுவே
இல்லத்து அரசன் நீர் எமைப் பிரிந்து
ஈசன் பாதம் சென்றீரோ- உம் பாசம் நாம் தேடி
ஊமையாய் கலங்குகின்றோம்
என்றும் நித்தியத்தில் இளைப்பாறிட
ஏறெடுக்கின்றோம் எம் செபங்களை
ஐயனே அமைதி அளித்திடுவீர்
ஒருமித்து கேட்கின்றோம் ஓயாமல் கேட்கின்றோம்
அமைதி அளித்திடுவீர் தந்தையே...

இளவாலை மேற்கு,
இளவாலை.

என்றும் அன்புடன்
குடும்பத்தினர்

AD- 89

## விண்ணக வாழ்வின்

34ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24 . 12 . 1931



இறைவன் அடியில் 22 . 01 . 1991

மனுவேற்பிள்ளை சில்வேஸ்ரர்

3ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 18 . 09 . 1938



இறைவன் அடியில 10 . 06 . 2022

மேரி இமக்குலேற் சில்வேஸ்ரர்

55ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 06 . 10 . 1962



இறைவன் அடியில் 26 . 06 . 1970

மிரியம் சாமினி சில்வேஸ்ரர்

இயேசு இறந்து உயிர்த்தெழுந்தார் என நம்புகிறோம். அப்படியானால்,
இயேசுவோடு இணைந்த நிலையில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார். (1தெசலோனிக்கர் 4:14)

AD- 85

அவர்களின் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும் ஆமென் (1 பர. அருள். திரி)

குடும்பத்தினர்

## குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா




குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் யூலை மாதம் 25ஆம் திகதி நடைபெற்றது. 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்த நாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 24ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட **ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும்** நற்கருணைவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழா அன்று மாலை புனிதரின் திருச்சொரூபத் தேர்ப்பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

## புங்குடுதீவில் அன்பிய சிறப்பு நிகழ்வுகள்



புங்குடுதீவுப் பங்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் அன்பியமாத சிறப்பு நிகழ்வுகள் கடந்த 25ஆம் திகதி ஆரம்பமாகி அங்கு நடைபெற்றுவருகின்றன. பங்குத்தந்தை அருட் தந்தை லியான்ஸ் அவர்களின் ஒழுங் குபடுத்தலில் அருட்சகோதரர்கள் ஹிலன ரஸ்மிக்க பெரோ மற்றும் ஆனந்தராஜ் அவர்களின் உதவியுடன் நடைபெற்றுவரும் இந்நிகழ்வில் வலய கொடிகள் ஏற்றப்பட்டு வலய ஊக்குவிப்பாளருக்கான கூட்டம், இல்லத் தரிசிப்புக்கள், வலயத்திருப்பலிகள், வலய ரீதியான விளையாட்டுக்கள் என்பன இடம் பெற்று வருகின்றன. இந்நிகழ்வுகளில் பங்குமக்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றிவருகின்றனர்.

## 100ஆவது அகவையில் அருட்சகோதரி



போர்டோவின் திருக்குடும்பக் கன்னியர் சபை அருட்சகோதரி மார்த்தா அவர்களின் 100ஆவது அகவை தின நிகழ்வு யூலை மாதம் 25ஆம் திகதி பாசையூர் திருக்குடும்பத் கன்னியர் மடத்தில் நடைபெற்றது. கன்னியர் சபை யாழ். மாகாண குழுவின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களின் தலைமையில் நன்றித் திருப்பலியும் தொடர்ந்து பிறந்ததின நிகழ்வுகளும் இடம்பெற்றன.அருட்சகோதரியின்பணி வாழ்விற்காக இறைவனுக்கு நன்றிகூறி இவரின் சுகவாழ்விற் காகவும் மன்றாடுவோம்.

## யாழ். புனித அடைக்கல அன்னை ஆலய தாத்தா பாட்டி தின சிறப்பு நிகழ்வு



தாத்தா பாட்டி மற்றும் முதியோர் தினத்தை முன்னிட்டு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்தகுமார் அவர்களின ஒழுங்குபடுத்தலில் நடை பெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் முதியோகள் மறைக்கல்வி மாணவர்களால் பூச்செண்டு கொடுத்து ஆலயத்திற்குள் அழைத்து வரப்பட்டுத் திருப்பலி இடம்பெற்றது. திருப்பலி நிறைவில் ஆலய மண்டபத்தில் முதியோர்களுக்கான ஒன்றுகூடல் இடம் பெற்றது. இவ் ஒன்றுகூடலில், சுவக்கீன் அன்னம்மாள் மூத்தோர் சங்கம் உருவாக்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப் பட்டதுடன் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மூத்தோர் சங்கத் தலைவர் மற்றும் யாழ். பிரதேச செயலக மூத்தோர் செயலகத் தலைவர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். தொடர்ந்து முதியோரால் ஆலய வளாகத்தில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன் அவர் களுக்கான கஞ்சி பரிமாறும் நிகழ்வும் இடம் பெற்றது. இந்நிகழ்வில் 75ற்கும் அதிகமான முதியோர் பங்குபற்றியிருந்தனர்.

## கந்தரோடை புனித றோஜா மாதா ஆலய வருடாந்தத் திரு விழா



கந்தரோடை புனித றோஜா மாதா ஆலய வருடாந்தத் திரு விழா பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல் வன் அவர்களின் ஒழு ங்கு படுத்த லில் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது. 23 ஆம் திகதி கொடியே ற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 26ஆம் திகதி நற் கருணைவிழா இடம்பெ ற்றது. திருவிழாத் திருப்பலி யை அமல மரித்தியாகிகள் சபை அருட்தந்தை அன்பு ராசா அவர்களும் நற்கரு ணைவிழாத் திருப்பலியை நற்கருணைநாதர் சபை அருட்தந்தை சந்தான அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலய தாத்தா பாட்டிகள் தின சிறப்பு நிகழ்வு.



தாத்தா பாட்டிகள் மற்றும் முதியோர் தினத்தை சிறப்பித்து சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை சகாயநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருப்பலியும் தொடர்ந்து முதியோர்களுக்கான ஒன்றுகூடலும் இடம்பெற்றன. இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் தேநீர் விருந்து, கலை நிகழ்வுகள் என்பன இடம்பெற்றதுடன் முதி யோர் களுக்கான அன்பளிப்புக்களும் வழங்கி வைக் கப்பட்டன. இந்நிகழ்வில் 55 வரையான முதியோர் பங்குபற்றியிருந்தனர்.

## புனித கயித்தார் ஆலயப் பிள்ளைகளுக்கான முதல்நன்மை



மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயப் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை ஞானறூபன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் யூலை மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. யாழ். மறை மாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை டியூக் வின்சன்ட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் 7 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## சாரையடி புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா



கரவெட்டிப் பங்கிற்குட்பட்ட சாரையடி புனித ஆரோக்கிய அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை விஜின்ரஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 26ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் அருட்தந்தை மைக் மயூரன் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை ஜொாட் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## 'விடுதலை' கோரி கவனயீர்ப்புப் போராட்டம்



தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி குரலற்றோரின் குரல் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட 'விடுதலை' கவனயீர்ப்புப் போராட்டம் கடந்த 24ஆம், 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. யாழ்ப்பாணம் சங்கிலியன் தோரணை வளைவு முன்பாக ஆரம்பமாகிய இப்பேரணி யாழ். கிட்டுப் பூங்காவைச் சென்றடைந்து அங்கு சிறை வாழ்க்கை கண்காட்சி, தமிழ் அரசியல் கைதி களின் விடுதலையை வலியுறுத்தும் சித்திரக் காட்சிப்படுத்தல், தமிழ் அரசியல் கைதி களின் விடுதலையை வலியுறுத்தி நாட்டப்படவுள்ள விடுதலை விருட்சத்திற்கான விடுதலை நீர் சேகரிப்பு, தமிழ் அரசியல் கைதியாக 15 வருடங்கள் சிறையிலிருந்த விவேகானந்தனூர் சதீஸ் அவர்கள் எழுதிய "துருவேறும் கை விலங்கு" நூல் அறிமுகம் என்பன இடம் பெற்றதுடன் இந்நிகழ்வில் கலந்து கொண் டவர்களுக்கு சிறைச்சாலையில் வழங்கப்படும் உணவும் தயாரித்து வழங்கப்பட்டது. இப்பேரணியில் மதத்தலைவர்கள், அருட்சகோதரிகள், அரசியல் கைதிகளின் உற வினர்கள், அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்பினர், பொதுமக்களெனப் பலரும் பங்குபற்றியிருந்தனர்.

## பொதுநிலையினர் கழக வருடாந்த ஒன்றுகூடல்




யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழக வருடாந்த ஒன்றுகூடலும் திருமண வாழ்வில் இணைந்து வெள்ளிவிழாக் காணும் தம்பதிகளுக்கான கௌரவிப்பும் கடந்த 27ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. கழக இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கழகத் தலைவர் திரு. ஜெகின் அவர்களின் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வின் ஆரம்பத்தில் கழக அங்கத்தவர்களும் தம்பதிகளும் புனித யூபிலகி கதவினூடாகப் பேராலயத்திற்குள் நுழைந்து அங்கு இடம்பெற்ற நற்கருணை வழிபாட்டில் பங்குபற்றினர். நற்கருணை வழிபாட்டை யாழ். மறைமாவட்ட அக வொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்கள் நெறிப் படுத்தியிருந்தார். தொடர்ந்து தம்பதிகள் பாண்ட் வாத்தியத்துடன் பேராலய மண்டபத்திற்கு அழை த்துவரப்பட்டு கொடியேற்றலுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. அரங்க நிகழ்வுகளில் கலை நிகழ்வுகளும் திருமண வாழ்வில் இணைந்து வெள்ளிவிழா காணும் 83 தம்பதிகளுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன. யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட இந்நி கழ்வில் அருட்தந்தையர்கள், கழக அங்கத்தவர்கள், தம்பதியினரென 300ற்கும் அதிகமானவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## பொற்பதி இராயப்பர் பெரு விழா

பொற்பதி புனித இராயப்பர் ஆலய வருடாந்தத்திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை ஜோன் குரூஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 01ம் திகதி நடைபெற்றது. 23ம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 31ம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். அகவொளி குடும்ப நல நிலைய இயக்குநர் அருட்தந்தை மனு வேற்பிள்ளை டேவிட் அவர்களும் நற்க ருணைவிழாத் திருப்பலியை பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை கிருபாகரன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழாவை சிறப்பித்து திருவிழா அன்று மாலை யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழுவின் விடியல் இசைக்குழுவினால் இசைச்சாரல் இசைநிகழ்வும் விடியல் கலைக்குழுவினால் வெ ளியே வா மனிதா நாடகமும் மேடையேற்றப்பட்டன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு ஆவணி மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.